# உதயன்

சுடர் : 36 | கதிர் : 249 | புதன்கிழமை | ஆடி 19 ஆம் நாள் 04 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 | விலை: 30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

# நாட்டில் அமைதியைப்பேண ஆயுதப் படைக்கு அழைப்பு!

## ஜனாதிபதியின் உத்தரவால் பரபரப்பு

கொழும்பு, ஓக. 4

நாடளாவிய ரீதியில் பொது அமைதியை நிலைநாட்டுமாறு அனைத்து ஆயுதம் தாங்கிய படையினருக்கும் அழைப்பு விடுத்து ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். இது நாடெங்கிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 19





## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் இருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல் 19

## வடக்கு மாகாணத்தில் 67 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றனர்

யாழ்ப்பாணம், ஓக. 4

வடக்கு மாகாணத்தில் இதுவரை 67 வீதமானவர்கள் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸையேனும் பெற்றுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் வவுனியா 19

## கொத்தலாவல பல்கலைக்கு எதிராக மாணவர்கள் நேற்று எழுச்சிப் போர்!

### நாடாளுமன்றம் நோக்கி நுழைய முற்பட்டதால் பொலிஸார் மாணவரிடையே பதற்றநிலை

கொழும்பு, ஓக. 4

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் நாளுக்குநாள் தீவிரம் பெற்று வருகின்றது. நேற்று மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பத்தரமுல்ல ஜயந்திபுரவில் உள்ள 19

## நல்லூர் பெருந்திருவிழாவை நடத்துவதற்கு ஒத்துழைக்குக

### மக்களிடம் மணிவண்ணன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 4

சுகாதார விதிமுறைகள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களை முழுமையாகவும் இறுக்கமாகவும் பின்பற்றி நல்லூர் பெருந்திருவிழாவை நடத்துவதற்கு 19

## மஹிந்தானந்தவுக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஓக. 4

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று நடத்தப் 19

## யாழ்ப்பாணம் போதனாவில் ஒட்சிசனுக்குத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒட்சிசன் தட்டுப்பாடு காணப்படுகின்றது என்று மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் சண்முகநாதன் சிறிபவானந்தராஜா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 19

## பெண் எம்.பிக்களுக்கு பாலியல் துன்புறுத்தல்

### ஐக்கிய மக்கள் சக்தியின் ரோஹினி ஆவேசக் கருத்து

கொழும்பு, ஓக. 4

நாடாளுமன்றத்தில் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாய் மூலமாக பாலியல் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹினி கவிரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாடாளுமன்றத்தில் நான் உட்பட 12 பெண் உறுப்பினர்கள் மட்டுமே 19

## அரந்தலாவ பிக்குகள் படுகொலை 34 வருடங்களின் பின் விசாரணை!

கொழும்பு, ஓக. 4

1987ஆம் ஆண்டில் அம்பாறை அரந்தலாவ பகுதியில் இடம்பெற்ற 31 பௌத்த பிக்குகள் படுகொலை சம்பவம் தொடர்பில் தற் 19

## வீட்டுத்திட்ட முறைகேடுகளை அம்பலப்படுத்தியவர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 4

அரசால் யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத் திட்டத்துக்குரிய பயனாளிகள் தெரிவில் முறைகேடு இடம்பெற்றிருப்பதாக அம்பலப்படுத்திய அபிவிருத்தி உத்தியோகத் 19

பாதுகாப்பாக வீட்டிலிருந்து SLT-Mobitel Mobile கட்டணத்தை Online ஊடாக செலுத்தி 5GB இலவசமாக பெறுங்கள்!




உங்கள் SLT-Mobitel Mobile கட்டணத்தை online ஊடாக செலுத்துங்கள்.

இச்சலுகையை பெறுவதற்கு ஒரு மாதத்திற்குள் குறைந்தபட்சம் ரூ.1,000/- கட்டணத்தை செலுத்த வேண்டும்.

www.sltmobitel.lk

SLTMOBITEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா இறப்புக்களுக்கு அரசுதான் முழுப்பொறுப்பு

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



**கொழும்பு,ஓக.4**
**இலங்கையில் பதிவான கொரோனா இறப்புக்களுக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும். தடுப்பூசி வழங்கும் பணிகள் மிகவும் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டமையே இதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
டெல்டா வைரஸ் மாத்திரமின்றி புதிய வைரஸ் திரிபுகளும் அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டை முழுமையாகத் திறப்பது பொருத்தமானதல்ல.

தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை தாமதமாக ஆரம்பித்தமையின் காரணமாக இதுவரையில் பதிவான சகல இறப்புக்களுக்கும் அரசே பொறுப்புக்கூற வேண்டும். எனவே தொடர்ந்தும் மக்களின் வாழ்க்கையுடன் விளையாடிக் கொண்டிருக்காமல் பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அதேவேளை சகல அரச உத்தியோகத்தர்களும் பணிக்கு அழைக்கப்பட்டுள்ளமை கர்ப்பிணிகள் , சிறு குழந்தைகளுடைய தாய்மாருக்கு ஆபத்தாகும். டெல்டாவுடன் புதிய திரிபுகளும் பரவ ஆரம்பித்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறு தான் செயற்படுவதா?

இவ்வாறான தீர்மானங்கள் ஊடாக அரசே நாட்டு மக்களை ஆபத்தில் தள்ளியுள்ளது. டெல்டா அச்சுறுத்தலிலிருந்து மக்களைப் பாதுகாக்க அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

நாட்டை முழுமையாகத் திறப்பதற்கான பொருத்தமான சந்தர்ப்பம் இதுவல்ல. இதுவரை பதிவாகியுள்ள இறப்புக்களுக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும் என்பதோடு, இறப்புக்களின் சாபமும் அரசையே சேரும். என்றார்.(ஒ,4)

# சுய பாதுகாப்பு தவறின் கொரோனா ஒழியாது

## திஸ்ஸ விதாரன தெரிவிப்பு

கொழும்பு,ஓக.4
பொது மக்கள் தங்களின் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அனைத்து அறிவுறுத்தல்களையும் பொலிஸாரும் பொதுச் சுகாதார தரப்பினரும் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்று லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை நாட்டு மக்கள் அனைவரும் முறையாகக் கடைப்பிடித்தால் தான் வைரஸ் பரவலை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் தொழிற்சங்கத்தினர் போராட்டங்களில் ஈடுபடுவது முற்றிலும் தவறான செயற்பாடாகும்.

கோரிக்கைகளை வெற்றி கொள்ள போராட்டத்தில் ஈடுப்படும் தருணம் இதுவல்ல. போராட்டத்தில் ஈடுபடும்போது எவரும் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிப்பதில்லை.

ஆகவே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் போராட்டங்களில் ஈடுபடுவது முற்றிலும் வெறுக்கத்தக்கது.

ஒரு தரப்பினரது தவறான செயற்பாடுகள் ஒட்டு மொத்த நாட்டையும் பாதிக்கும். புதுவருட கொவிட் கொத்தணிப் பரவல் இவ்வாறே ஆரம்பமானது என்பதை நாட்டு மக்கள் மறந்துவிடக்கூடாது. என்றார்.(ஒ,4)



## ‘வேடதாரி’ சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக. 4
புத்தாக்க அரங்க இயக்கத்தால் ‘வேடதாரி’ என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது. எஸ்.ரி.குமரன் மற்றும் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரை பிரதம ஆசிரியர்களாகக் கொண்டு இந்தச் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

சஞ்சிகை வெளியீட்டின் முதற்பிரதியை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யாழ்ப்பாணம் கல்வி வலய நாடகமும் அரங்கியலும் ஆசிரிய ஆலோசகர் ஜோன்சன் ராஜ்குமார் பெற்றுக்கொண்டார்.

திருமறைக்கலாமன்றத்தின் நிறுவுநர் கலாநிதி கலைமாமேதை அருட்திரு மரியசேவியர் அடிகளாரின் சிறப்பு இதழாக இது வெளிவந்துள்ளது.(ஐ)

# திருமண நிகழ்வுக்கு மீண்டும் தடை

## சுகாதாரப் பரிசோதகர் சங்கம் கோரிக்கை

கொழும்பு,ஓக.4
இலங்கையில் டெல்டா வைரஸ் பரவல் மோசமான தாக்கங்களை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ள நிலையில், நாடளாவிய ரீதியில் இடம்பெறும் திருமண நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்வுகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலையில், தற்போது நாடு திறக்கப்பட்டுள்ளதை அடுத்து, வைரஸ் பரவல் வேகம் அதிகரிக்கும் என்று நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். திருமண நிகழ்வுகளில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணும் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

பொது நிகழ்வு கொத்தணியொன்று உருவாகுவதை நாம் அவதானித்து வருகின்றோம். இது வேகமாக சமூகப் பரவலாக மாற்றமடைய அதிக வாய்ப்புகள் உள்ளன.

எனவே தற்போது உள்ள நிலைமையில் திருமண நிகழ்வுகள், ஏனைய மத, கலாசார நிகழ்வுகள், பொது நிகழ்வுகள் மற்றும் மரண நிகழ்வுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அதற்கான அறிவிப்பை நாம் கொவிட் செயலணிக் கூட்டத்தில் விடுத்துள்ளோம்-என்றார். (ஒ,4)

# ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்க வாய்ப்பில்லை

## அரச தரப்பு தெரிவிப்பு

கொழும்பு,ஓக.4
நாட்டின் தற்போதைய நிலையில் ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு வாய்ப்பில்லை என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஆசிரியர்களின் சம்பளக் கோரிக்கையை நிறைவேற்ற அரசுக்கு 56 பில்லியன் ரூபா செலவாகும். எவ்வாறெனினும் இந்த விடயத்தை வரவு செலவுத் திட்டத்தில் பரிசீலிப்போம். இந்த விவகாரம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இதன் முடிவுகள் தொழிற்சங்கத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு அரசால் தற்சமயம் 56 பில்லியன் ரூபா நிதியைச் செலவழிக்க இயலாது.

போராட்டங்களை நடத்த தொழிற்சங்கங்களுக்கு ஜனநாயக உரிமை உள்ளது. இந்த உரிமையை அரசு தடுக்காது - என்றார். (ஒ,4)

# கொரோனா நோயாளி தப்பியோட்டம்

கொழும்பு, ஓக. 4
கம்பளை மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த தொற்றாளர் ஒருவர் நேற்றுக் காலை தப்பியோடிய நிலையில், முற்பகலில் பாதுகாப்பு அதிகாரிகள் அவர் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து, மீள சிகிச்சை நிலையத்துக்கு அழைத்து வந்தனர்.

72 வயதுடைய நபரொருவரே இவ்வாறு தப்பியோடியுள்ளார் எனவும், கம்பளையில் இருந்து ஆட்டோவில்சென்று, அதன் பின்னர் நடைவழியாக வீட்டுக்கு சென்றுள்ளார் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கம்பளை தொழுவ, குறுகல பகுதியில் உள்ள வீட்டிலேயே அவர் மறைவாக இருந்துள்ளார். எனினும், துரிதமாக செயற்பட்ட பாதுகாப்பு தரப்பினர் அவரை கண்டுபிடித்தனர்.

வைரஸ் தொற்று உறுதியான பின்னர்கூட, சிகிச்சை நிலையத்துக்கு செல்வதில் இவர் இழுத்தடிப்பு செய்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. (ஒ,44)

# போராட்டத்தை முடக்க கல்வி அமைச்சு சதி

## ஆசிரியர் சங்கம் கொதிப்பு

கொழும்பு,ஓக.4
கல்வித்துறையுடன் தொடர்புடையவர்களை பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை, எமது தொழிற்சங்க நடவடிக்கைகளை முடக்குவதற்கான சதித்திட்டம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளல் மற்றும் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவை இரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து எம்மால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை தொடர்கின்றது.

கடந்த மாதம் 12 ஆம் திகதி முதல் இணையவழி கற்பித்தலிலிருந்து விலகி எமது தொழிற்சங்க நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்தோம்.

தற்போது பயிற்சிகளை வழங்குதல் , உயர்தரத்துக்கான விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் , உயர்தரப் பரீட்சைக்கான செயற்பாடுகள், பரீட்சை வினாத்தாள் திருத்துவதற்காக விண்ணப்பித்தல், வலய மற்றும் மாகாண மட்டத்தில் இடம்பெறுகின்ற கல்வி அமைச்சின் கலந்துரையாடல்கள் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளிலிருந்தும் நாம் விலகியுள்ளோம்.

இது தொடர்பில் கடந்த வாரம் பிரதமருடன் நடைபெற்ற பேச்சின் போது , இந்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து தீர்வை வழங்குவோம் என்று உறுதியளிக்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் கல்வித்துறையுடன் தொடர்புடையவர்களை பாடசாலைகளுக்குச் சமுகமளிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார்.

பாடசாலைக்குச் செல்வதற்கான சூழல் உருவாக்கப்படவில்லை. அவ்வாறிருக்கையில் திடீரென எதற்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டது ? இது அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை முடக்குவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள சதித்திட்டமாகும்-என்றார். (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் அரசு

*பால்மாவுக்கு தட்டுப்பாடு இல்லையாம்!*

கொழும்பு, ஓக. 4
நாட்டில் பால்மாவுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, சந்தையில் பால்மாவுக்கு தட்டுப்பாடு இருப்பதாக பொதுமக்கள் மத்தியில் பரவி வரும் செய்திகள் குறித்து கேட்டுபோது, அமைச்சர் இவ்வாறு கூறினார்.
'பால்மாவுக்குத் தட்டுப்பாடு இருப்பதாக அரசுக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாது என்று நம்புகின்றோம். அதேபோல உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரித்து, தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது' எனவும் அவர் குறிப்பிட்டார். (ஓ,44)

# நோய் அறிகுறியற்ற தொற்றாளர்களுக்கு வீட்டிலேயே சிகிச்சையளிக்கத் திட்டம்

## ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லை அடித்துக்கூறுகிறது அரசு

கொழும்பு, ஓக. 4
**நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளபோதிலும் 'ஒட்சிசனுக்கு' எவ்வித தட்டுப்பாடும் ஏற்படவில்லை. அதேபோல நோய் அறிகுறிகள் தென்படாத தொற்றாளர்களுக்கு வீட்டில் வைத்தே சிகிச்சையளிக்கும் நடைமுறை தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.
இதன்போது நாட்டில் மீண்டும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அமைச்சர் பத்திரண மேலும் தெரிவிக்கையில்,
தேவையானளவு ஒட்சிசன் கையிருப்பில் உள்ளதால் அது தொடர்பில் வீண் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. மருத்துவமனைகளில் உள்ள கட்டில்கள் தொடர்பில் சில பிரதேசங்களில் நெருக்கடி நிலை காணப்படுகின்றது. அதேபோல தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையும் உண்மைதான். எனவே, தொற்றாளர்கள் அதிகளவு அடையாளம் காணப்படும் பகுதிகளில், நோய் அறிகுறிகள் தென்படாதவர்களுக்கு வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் இத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. நாட்டில் ஏனைய பகுதிகளிலும் இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு எதிர்பார்க்கின்றது.
நாட்டில் தற்போது உயிரிழப்பவர்களில் 90 வீதமானோர் தடுப்பூசி பெறாதவர்கள். அதேபோல நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்கள்.
எனவே, தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தடுப்பூசி மத்திய நிலையத்துக்கு செல்ல முடியாதவர்களுக்கு வீடுகளுக்கே வந்து செலுத்தப்படும். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இது விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தடுப்பூசி பெறவேண்டியது உங்களின் பொறுப்பு- என்றார். (ஓ.44)

## தென்மராட்சியில் 19 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்

சாவகச்சேரி, ஓக. 4
தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று மதியம் வரையான காலப்பகுதியில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதென சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக புள்ளி விவரங்கள் தெரிவித்தன.
பிரதேசத்தில் வதியும் 30 வயதுக்கு மேற்பட்ட 26 ஆயிரத்து 750 பேருக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், கொடிகாமம் , கைதடி, வரணி ஆகிய மருத்துவமனைகள் மற்றும் சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபம் ஆகியவற்றில் தடுப்பூசி ஏற்றுவதற்கு, ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம் பிரதேசத்தில் 19 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இதுவரை கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டனர் எனவும், தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்கு மக்கள் தாமாகவே முன்வந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-9)

## சீனாவிடமிருந்து ஒட்சிசன் இறக்குமதி

கொழும்பு,ஓக.4
சீனாவில் இருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்ய மருந்து ஒழுங்குமுறை மற்றும் வழங்கல் இராஜாங்க அமைச்சு தயாராகி வருகின்றது.
கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தினசரி தேவைப்படும் ஒட்சிசனின் அளவு 45 ஆயிரம் லீற்றரை தாண்டியுள்ளதால், சீனாவில் இருந்து ஒட்சிசனைப் பெற அமைச்சு முடிவு செய்துள்ளது.
அந்த வகையில் 1 லட்சத்து 20 ஆயிரம் லீற்றர் ஒட்சிசன் இறக்குமதி செய்யப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.
இதற்கிடையில், பல்லேகலேயை தளமாகக் கொண்ட தனியார் நிறுவனமொன்று 1.5 மில்லியன் ஒட்சிசன் சிலிண்டர்களை தயாரித்து சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளது. (ஓ,4)

## தூது அனுப்புவதற்கு முன்னர் 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம் தேவை

*வவுனியாவில் போராடும் உறவுகள் கோரிக்கை*



வவுனியா, ஓக 4
அரசியல் தீர்வு மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் சார்ந்த விடயங்களை எங்களுடன் உரையாட மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
நாங்கள் எந்த இலங்கை நிறுவனங்களையும் நம்பவில்லை. மனித உரிமை உயர்ஸ்தானிகர் மிசால் பேச்லெட்டை மத்தியஸ்தராக்க விரும்புகிறோம்.
இலங்கை மனித உரிமை ஆணையம் எங்கள் சலுகையை ஏற்க ஒப்புக்கொண்டால், அவர்களின் கோரிக்கையை நாங்கள் பரிசீலிக்கலாம். இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. அனைவரும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் ஒரு சிறந்த மனித உரிமை கலாசாரத்தை வளர்க்க உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்கள் ஒருபோதும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றவில்லை.
மே 2009 இல் ஒரு லட்சத்து 46 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு எங்கே இருந்தது. மட்டக்களப்பு மற்றும் வவுனியாவில் உள்ள இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் தமிழர்கள் யாரும் இல்லை என்பதை நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம்.
நேர்மையாக இருங்கள், எங்கள் போராட்டத்தை யாரும் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்தக்கூடாது. அரசியல் தீர்வு மற்றும் மனித உரிமைகள் சார்ந்த விடயங்களுக்கு, எங்களுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை. எங்கள் முதல் விருப்பமான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா போன்றவையே தேவை ஐ.நாவையும் கருத்தில் கொள்ளலாம் - என்றனர். (ப-110)

## வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு அடுத்தவாரம் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

சாவகச்சேரி, ஓக. 4
தென்மராட்சி பிரதேசத்தில் வறட்சி காரணமாக குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை காணப்படும் கிராமங்கள் மற்றும் பாடசாலைகள் போன்றவற்றுக்கு அடுத்த வாரம் தொடக்கம் பௌசர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்க பிரதேச செயலகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் .
சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் நீர் வழங்கல் அதிகார சபை ஆகியவற்றின் ஊடாக இடர்கால முகாமைத்துவ திணைக்களத்தின் ஏற்பாட்டில் இவ்வாறு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது. வறட்சி காரணமாக பிரதேசத்தில் உள்ள 27 கிராமங்களில் குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. தமக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்டது போன்று குடிதண்ணீர் வழங்கப்பட்ட வேண்டுமென பொது மக்களும் பொது அமைப்புகளும் பிரதேச செயலகத்துக்கு கோரிக்கை விடுத்து வருகின்றன. இடர்கால முகாமைத்துவ திணைக்களத்தால் குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை காணப்படும் கிராமங்கள், மற்றும் பாடசாலைகளில் சுமார் ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்ரிக் தண்ணீர் தாங்கிகள் வைத்து கடந்த காலங்களில் தண்ணீர் வழங்கப்பட்டது. அத்துடன் தண்ணீர் விநியோகத்துக்கென சாவகச்சேரி பிரதேச சபைக்கு தண்ணீர் தாங்கியுடன் கூடிய உழவு இயந்திரம் இடர்கால முகாமைத்துவ திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மன்னார் பொது மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

மன்னார்,ஒக.4
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு சுமார் 2 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் மன்னார் மெசிடோ நிறுவனத்தால் கையளிக்கப்பட்டன.
மருத்துவமனைக்கு அவசர தேவையாக காணப்பட்ட நோய் நிலை கண்காணிப்பு திரை, கிருமி நீக்கும் இயந்திரங்கள் மற்றும் ஒட்சிசன் செறிவூட்டிகள் போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டன.
மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் மாவட்ட பணிப்பாளர் யாட்சன் பிகிறாடோ வால், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெலிடம் நேற்று பொருள்கள் கையளிக்கப்பட்டன.
நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட உதவிச் செயலர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-213)

# ஹிஷாலினி தங்கியிருந்த அறையில் மற்றொரு ஆதாரம்

## பொலிஸார் தீவிர விசாரணை



**கொழும்பு,ஒக.4**
**முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடைய இல்லத்தில் வீட்டு வேலைக்கமர்த்தப்பட்டு தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினி தங்கியிருந்த அறையின் சுவரில் எழுதப்பட்டிருந்த வாசகமொன்று பொலிஸாரின் விசாரணைக் குழுவினரால் பெறப்பட்டுள்ளது.**

ஆங்கில எழுத்துக்களில் தமிழ் அர்த்தம் கிடைக்கப்பெறும் வகையில் எழுதப்பட்டுள்ள வசனம், ஹிஷாலினியால் எழுதப்பட்டதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக அவர் உபயோகித்த பாடப்புத்தகங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஹிஷாலினி தங்கியிருந்த அறை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, ஆங்கில எழுத்துக்களில் தமிழ் அர்த்தம் கிடைக்கப்பெறும் வகையில் "என் சாவுக்குக் காரணம்" என்று எழுதப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.
இவ்வாறு எழுதப்பட்டுள்ள சுவர், புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு குறித்த பகுதி அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் கையெழுத்து தொடர்பான விசேட நிபுணர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.
குறித்த சிறுமி பாடசாலை சென்ற போது உபயோகித்த பாடசாலைப் புத்தகங்கள் சில பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. சிறுமி வசித்த அறையின் சுவரில் எழுதப்பட்டிருந்த வசனம் அவரால் எழுதப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே பாடப்புத்தகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.
மூவரடங்கிய விசேட நீதிமன்ற மருத்துவக் குழுவினால் இரண்டாவது பிரேத பரிசோதனை தொடர்பான அறிக்கை வழங்கப்படவுள்ளது. அத்தோடு குறித்த வீட்டில் இதற்கு முன்னர் பணியாற்றிய ஏனைய பெண்களிடம் சகல வாக்குமூலமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த வாக்குமூலங்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன -என்றார். (ஒ.4)

# வனவிலங்குகளால் பாதிப்பு: இழப்பீட்டு தொகை மாற்றம்

கொழும்பு,ஒக.4
வனவிலங்குகளால் இடம்பெறும் பாதிப்புக்களுக்கு இழப்பீடு வழங்கும் நடைமுறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைவாக உயிரிழப்புக்கான இழப்பீட்டு தொகை 10 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. காட்டு யானைகள் உள்ளிட்ட பாதுகாப்பு வனவிலங்குகளால் இடம்பெறும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கும் பொறிமுறையை திருத்தம் செய்தல், பாதுகாப்பு வனவிலங்குகளான யானைகள், சிறுத்தைகள், கரடிகள், காட்டு எருதுகள் மற்றும் முதலைகள் ஆகியவற்றின் தாக்குதல் காரணமாக உயிரிழக்கும் மற்றும் முழுமையான அல்லது பகுதியளவில் அங்கவீனமுறும் நபர்களுக்கும், வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதங்களுக்கும் தற்போது செலுத்தப்பட்டு வரும் இழப்பீட்டுத் தொகைகளைத் திருத்தம் செய்வதற்காக வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
அதற்கமைவாக உயிரிழப்புக்காக இதுவரை செலுத்தப்பட்டு வந்த 5 லட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகையை பாலின வேறுபாடோ அல்லது வயது வேறுபாடோ இன்றி 10 லட்சம் ரூபா வரை அதிகரித்தல், முழுமையான அங்கவீனத்துக்கு ஆளாகும் நபரொருவருக்கு இதுவரை செலுத்தப்பட்டு வந்த 5 லட்ச ரூபா இழப்பீட்டுத் தொகையை பாலின வேறுபாடோ அல்லது வயது வேறுபாடோ இன்றி 10 லட்ச ரூபா வரை அதிகரித்தல், பகுதியளவில் அங்கவீனமுறும் அல்லது உடல் காயங்களுக்கு ஆளாகின்றவர்களுக்கு இதுவரை செலுத்தப்பட்டு வந்த 75 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகையை ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரித்தல், காட்டு யானைகளின் தாக்குதல்கனால் இடம்பெறும் வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதங்களுக்காக இதுவரை செலுத்தப்பட்டு வந்த ஒரு லட்ச ரூபா இழப்பீட்டுத் தொகையை அதிகபட்சம் இரண்டு லட்சம் ரூபா வரை அதிகரித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. (ஒ.4)



# இலங்கையின் எதிர்க்கட்சி அனைத்திலும் வித்தியாசம்

## ஜோன்ஸ்டனின் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஒக.4
கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க பிற நாடுகளின் எதிர்க்கட்சிகள் அரசுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்றன. எமது நாட்டில் அந்த நிலைமை கிடையாது. அனைத்து விடயங்களிலும் அரசியல் இலாபம் தேடும் எதிர்க்கட்சியினரே உள்ளனர் என்று நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனா வைரஸ் தாக்கத்தை இல்லாதொழிக்க அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் குறுகிய அரசியல் நோக்கங்களை விடுத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாட்டைத் தொடர்ந்து மூடி வைக்க முடியாது. சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய அனைத்து சவால்களையும் வெற்றிகொள்ள வேண்டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது.
ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு அமைய தடுப்பூசி செலுத்தும் பணிகள் முப்படையினர், பொலிஸ் மற்றும் சுகாதாரத் தரப்பினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. தடுப்பூசி விவகாரத்தில் எவ்வித நெருக்கடி நிலையும் ஏற்படாது- என்றார். (ஒ.4)

# இலங்கைக்கு ஆபத்தில்லை

கொழும்பு,ஒக.4
அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு அருகே ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தல்கள் இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதனால் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வசிப்போர் அச்சமடையத் தேவையில்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் 6.5 ரிச்டர் அளவில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.
அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவில் உள்ள போர்ட் பிளேயாரின் தென்கிழக்கில் 310 கி.மீ (190 மைல்) தொலைவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. (ஒ.4)

# சமுர்த்தி அலுவலர்களுக்கு ரூ.10 ஆயிரம் கொடுப்பனவு

சாவகச்சேரி, ஒக. 4
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படும் மற்றும் தனிமைப்படுத்தப்படும் சமுர்த்தி அலுவலர்களுக்கு சமுர்த்தி திணைக்களத்தின் ஊழியர் நலனோம்பும் திட்டத்தின் கீழ் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.
சமுர்த்தி திணைக்களத்தால் நோய்களுக்கு உள்ளாகும் அலுவலர்களுக்கு உதவவென ஊழியர் நலனோம்பும் திட்டம் உருவாக்கப்பட்டு பாதிக்கப்படும் அலுவலர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்குவதென தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸ் தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு கிட்டும்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.4**

**நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றுக் காரணமாக உலக சந்தையில் அனைத்து வகையான உற்பத்திகளும் குறைவடைந்துள்ளன. அதனால் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சமையல் எரிவாயு விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதனால் உலக சந்தையில் அதிகரிக்கப்பட்டிருக்கும் எரிவாயு விலைக்கு நிகராக எமது நாட்டில் காஸ் இறக்குமதி செய்யும் லிட்ரோ மற்றும் லாப் காஸ் நிறுவனங்கள் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை அதிகரிக்குமாறு நுகர்வோர் அதிகாரச்சபையிடம் கோரி இருந்தன.

எனினும் சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டால் அது நுகர்வோருக்கு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தும் என்று அரசு விலை அதிகரிப்புக்குச் செல்லவில்லை. என்றாலும் காஸ் நிறுவனங்கள் கூடிய விலைக்கு காஸைப் பெற்றுக்கொண்டு தற்போது இருக்கும் விலைக்கு தொடர்ந்து விநியோகிக்க முடியாது. அதற்கு மாற்றுவழி ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

லிட்ரோ காஸ் நிறுவனம் அரசுடன் இணைந்து செயற்படும் நிறுவனம் என்பதால் அந்த நிறுவனத்துக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசு பொறுப்பேற்றிருக்கின்றது. அதனால் காஸ் தட்டுப்பாடு நாட்டில் இல்லை. என்றாலும் லாப் காஸ் நிறுவனத்துக்கு ஏற்படும் நஷ்டத்தைக் கட்டுப்படுத்த நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையும் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

அதுதொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு இதுவரை வழங்காமல் இருப்பதால் லாப் காஸ்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விரைவில் அது தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

மக்களின் வாழ்வாதாரப் போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசு அத்தியாவசிய பொருள்களை சதொச நிறுவனம் ஊடாக நிவாரண அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில், எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழ் அடங்கிய முகக்கவசத்தை 10 ரூபாவுக்கு விற்பனைசெய்யவும், ஒரு சில அரிசி வகைகள், சலவை சவர்க்கார வகைகள், பிஸ்கட் போன்றவற்றை சந்தையில் விற்கப்படும் விலையை விடக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்- என்றார். (ஓ.4)

# தூதரக சேவைகளுக்கு முன்னரே திட்டமிடுக

## இந்தியத் தூதரகம் அறிவிப்பு

கொழும்பு.ஓக.4

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் விசா மற்றும் ஏனைய சேவைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பவர்கள் , முன்கூட்டியே திட்டமிட்டு, அதற்கமைவாகச் செயற்பட வேண்டும் என்று தூதரகம் அறிவித்துள்ளது. தற்போது நாட்டிலுள்ள கொரோனாத் தொற்று நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

விசா மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பாக இலங்கை பிரஜைகளிடமிருந்து இந்தியத் தூதரகம் பல்வேறு கோரிக்கைகளை பெற்றுள்ளது.

ச்சாத்தியமான சகல வழிகளிலும் அந்தக் கோரிக்கைகளுக்கு சேவை வழங்குவதில் தூதரகம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

இலங்கையில் தற்போது காணப்படும் சூழ்நிலை தொடர்பான உத்தியோகபூர்வ தரவுகளுக்கு அமைவாக தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் துரதிஷ்டவசமாக அதிகரித்த நிலையில் உள்ளன. டெல்டா வகையான கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் காணப்படும் நிலையிலும், பொதுமக்களின் நலன்களின் மீதான அக்கறை காரணமாக சூழலுக்கு ஏற்றவாறு அலுவலகக் கடமைகளை முன்னெடுப்பதற்கு தூதரகம் தீர்மானித்துள்ளது.

இதன் காரணமாக விசா மற்றும் ஏனைய கொன்சியூலர் சேவைகளுடன் தொடர்புடையவை சேவ்வகளைப் பூர்த்திசெய்வதில் மேலதிக நேரம் செலவிடவேண்டிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இவற்றைக் கவனத்தில் கொண்டு சேவைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு அதற்கமைவாக செயற்பட வேண்டும் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஒ.4)

# மன்னாரில் இதுவரை 10 பேர் கொரோனாத் தொற்றால் சாவு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், ஓக. 4

மன்னார் மாவட்டத்தில் இதுவரையில் 10 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் இந்த வாரத்தின் இறுதியில் கொரோனாத் தடுப்பு ஊசியின் இரண்டாம் கட்டம் வழங்கப்பட உள்ளது. ஏற்கனவே 30 வயதுக்கு மேற்பட்ட 52 ஆயிரத்து 628 பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இதே வேளை கடந்த மூன்று தினங்களாக மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் 120 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 61 பேர் தாழ்வுபாடு பகுதியில் மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிபவர்கள், 12 பேர் செல்வநகர் பகுதியைச் சார்ந்தவர்கள். 4 பேர் பேசாலை பகுதியைச் சார்ந்தவர்கள். இவர்களோடு சேர்த்து மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரத்து 107 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் இந்த வருடத்தில் ஆயிரத்து 90 பேரும், புத்தாண்டு கொத்தணியுடன் 755 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டாலும் மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அத்தோடு ஆலயங்களில் நடைபெறுகின்ற திருவிழாக்களில் அனுமதிக்கப்பட்ட பக்தர்கள் மாத்திரமே பங்கு கொள்ள வேண்டும் விழாக்கள் முடிந்த பின் வெளியில் கூடி நிற்பதை தவிர்க்க வேண்டும் - என்றார். (ப-213)



# 54,000 பேருக்கு இதுவரை வவுனியாவில் தடுப்பூசி

வவுனியா, ஓக. 4

வவுனியாவில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலய மண்டபத்தில் தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டம் நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பமானது. இதில் அதிகளவான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர். வவுனியாவில் இதுவரை 54 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. நேற்றையதினம் கந்தபுரம், கோயில்குளம், பாவற்குளம், செட்டிகுளம், பூவரசங்குளம், கன்னாட்டி, நேரியகுளம், நெடுங்கேணி போன்ற 16 நிலையங்களில் தடுப்பூசி செலுத்தப்பட்டது. (ப-110)

# சந்தையில் மயங்கி வீழ்ந்து 62 வயது வியாபாரி சாவு

பளை, ஓக.4

பளை பொதுச்சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இயக்கச்சியைச சேர்ந்த 62 வயதுடைய வியாபாரி ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். மாரடைப்பு ஏற்பட்டே அவர் உயிரிழந்தார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஊறித்த வியாபாரி, முதல் நாள் பளையில் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார் என்றும், அதன் பின்னர் நேற்று முன்தினம் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை நெஞ்சுவலி ஏற்படவே மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கு உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது . (ப9)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி,ஓக.4

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அல்லாரை அ.த.க.பாடசாலையில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. வடக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை தரம் 11 ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பம் செய்வோர் தமது கல்வி வலயத்தில் உரியபடிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி தமது பிரிவு வலயக் கல்விப் பணிப்பாளரின் விதப்புரையுடன் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கிருபாகரன் அறிவித்துள்ளார்.

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் க.கணேசபாலேந்திரன் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். இவரின் இடத்துக்கு அல்லாரை அ.த.க.பாடசாலையின் அதிபர் க.தேவாஸ்வரன், கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியால அதிபராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வெற்றிடத்துக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ஐ-௭)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வாமை உடையவர்களுக்கு ஓகஸ்ட் 7ஆம் திகதி தடுப்பூசி

## வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 4**
**வடக்கு மாகாணத்தில் மூன்றாம் கட்டமாக முதலாவது டோஸ் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஓகஸ்ட் 7ஆம் திகதி வரை இடம்பெறும் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் உள்ளதாவது:
மூன்றாம் கட்டமாக 2 லட்சம் பேருக்கு முதலாவது டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது. தடுப்பூசி ஏற்றலில் ஒவ்வாமை அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும், தெல்லிப்பழை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் 7ஆம் திகதி காலை அவர்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்படும். எனவே மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் இருப்பவர்கள் தமது பிரிவு சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்துடன் குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்குச் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் -என்றுள்ளது. (ம)

# தடுப்பூசி ஏற்றிய அட்டை இல்லாது நடமாடினால் பி.சி.ஆர். நிச்சயம்

*சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை*

சாவகச்சேரி, ஓக. 4
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் நாளை வியாழக்கிழமை சாவகச்சேரி நகரப் பகுதியில் எழுமாற்று பி.சி.ஆர்.பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளனர்.
அண்மைக் காலமாக கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலை காணப்படுகிறது. அத்துடன் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதனைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி நகரப் பகுதியில் எழுமாற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தை போன்றவற்றுக்கு வரும் பொதுமக்கள் மற்றும் வீதிகளில் நடமாடுவோர் கொரோனாத் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டையுடன் நடமாடுமாறும், தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டை இன்றி காணப்படுவோர் கட்டாயம் எழுமாற்று பி.சி..ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)





# வீதியில் வீசப்படும் உணவகக் கழிவுகள்

*மக்கள் குற்றச்சாட்டு*

கிளிநொச்சி,ஓக.4
கிளிநொச்சி புளியம்பொக்கணை பகுதியின் முதன்மை வீதியின் இரு மருங்கிலும் உணவகங்களின் கழிவுகள் கொட்டப்படுவதால், துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதியால் பயணிப்போர் விசனம் தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியில் உள்ள சில உணவகங்கள், கழிவுகளை வீதியோரங்களில் வீசிவிட்டுச் செல்கின்றன.
இவற்றை நாய்கள் மற்றும் பறவைகள் இழுத்து வந்து வீதியின் நடுவே போட்டுவிட்டுச் செல்கின்றன.
இதனால் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், மூக்கைப் பொத்தியே வண்ணமே அந்த வீதியைக் கடக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என கவலை தெரிவித்தனர்.
எனவே இது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-113)

வர்த்தக நிலையத்தில்

# மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் மீட்பு

சாவகச்சேரி ஓக. 4
சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மனித பாவனைக்கு உதவாத சில பொருள்கள் கைப்பற்றப்பட்டன.
பொதுமக்கள் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட பரிசோதனையின் போது வண்டுகள் காணப்பட்ட மா மற்றும் றஸ்க் தூள் போன்றவற்றையும், உற்பத்தித் திகதி குறிப்பிடாத உப்பு பைகள், கஜு விதைகள் பைகள் மற்றும் மாஜரின் போன்ற பொருள்கள் கைப்பற்றப்பட்டன. குறித்த வர்த்தக நிலையத்துக்கு எதிராக சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ-9)

# உயிரிழந்த சிறுமிக்கு நீதிகோரி பதுளையில் போராட்டம் !

பதுளை,ஒக.4
நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீனின் வீட்டில் பணிப் பெண்ணாக இருந்த ஹிஷாலினியின் உயிரிழப்புக்கு நீதிகோரி பதுளை மடுல்சீமை நகரில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. மடுல்சீமை பகுதியின் அமுனுதோவை, உடுதோவை, விராலிபத்தனை, ஊவாக்கலை, பட்டவத்தை, கல்லுள்ளை மற்றும் கொக்காகலை ஆகிய பெருந்தோட்டங்களின் தொழிலாளர்கள் மேற்படி போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ஐ)

# கல்வியை வியாபாரமாக்கும் சட்டவரைபு: எதிரான போராட்டத்தில் ஒன்றிணையுங்கள்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 4
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் இன்று இடம்பெறவுள்ள போராட்டத்துக்கு அனைவரையும் இணைந்து வலுச்சேர்க்குமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.
இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;
இலவசக் கல்வியை இராணுவமயப்படுத்தி, வியாபாரமாக்க முயலும் இன்றைய ஆட்சியாளர்களால் இலங்கைப் நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்படவுள்ள கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டவரைபை இரத்துச்செய்ய வலியுறுத்தி, நாடு முழுவதும் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினரின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை மதியம் 12 மணி தொடக்கம் பி.ப. 1 மணிவரை யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு முழுமையான ஆதரவை வெளிப்படுத்துவதுடன், அனைவரையும் இப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கின்றோம்.
கொரோனாத் தொற்றின் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு நிற்கும் சூழலிலே, பனையால் விழுந்தவரை மாடேறி மிதித்தது போல பெருந்தொற்றின் திரைமறைவில் மேலும் மேலும் மக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் திடீர் இறக்குமதித் தடைகள் மூலமாக ஏற்படுத்தப்படும் அத்தியவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, அதிகரித்துச் செல்லும் வரிகள் மூலமான விலையேற்றம், அவசியமற்ற வகையில் அனைத்து விடயங்களிலும் திணிப்பாக முன்னெடுக்கப்படும் இராணுவமயமாக்கல், தேசிய வளங்களை அந்நிய சக்திகளுக்கு விற்பனை செய்தல், அரச துறைகளைத் தனியாருக்குத் தாரைவார்த்தல் ஆகியவற்றுடன் இணைந்ததாக, இக் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டவரைபு ஊடாகக் கல்வியை இராணுவமயப்படுத்தி வியாபாரமாக்கும் முயற்சி அமைந்துள்ளது. இம் மக்கள் விரோத செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டியது இந்த நாட்டின் பிரஜைகள், ஜனநாயகச் செயற்பாட்டாளர்கள் அனைவரதும் முக்கிய கடமையாகும் என்றுள்ளது. (ப)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

சங்கானை,ஒக.4
உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி அருளாசியுரையும், வேதபாராயணமும் நாளை வியாழக்கிழமை சங்கானை நிகரையம்பதி சாமுண்டாதேவி சமேத அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளன. இதன்போது ஆலயத்தின் முதன்மைக் குருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ சந்திர ஜனார்த்தனசர்மா அருளாசி உரையையும், வேதபாராயணத்தையும் நிகழ்த்தவுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொறுப்பேற்பது யார்?

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத்திட்டத்தில் பெரும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பில் தொடர்ந்தும் வெளிவரும் தகவல்கள் மாவட்ட நிர்வாகத்தின் ஆளுமை மீதும், நம்பிக்கை மீதும் பெரும் சந்தேகத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

வீட்டுத்திட்டத்துக்கான இறுதிப் பட்டியல் என்று பிரதேச செயலர்கள் கையெழுத்திட்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு சமர்ப்பித்ததை உறுதிப்படுத்தி யாழ். மாவட்டச் செயலர் க.மகேசனும் கையெழுத்திட்டு மாவட்டத்தின் இணைத்தலைவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

இந்தப் பயனாளிகள் தெரிவு தொடர்பில் பிரதமர் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஓர் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. பிரதமரின் அலுவலக இணைப்பாளர் தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தின் தொடர்ச்சியாக, பிரதேச செயலர்கள் அனுப்பிய இறுதிப் பட்டியலை மீளவும் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்த பணிக்கப்பட்டது.

இதன்போது பிரதேச செயலர்கள் தாம் முன்னர் அனுப்பியபட்டியலிலிருந்து 187 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக 187 பேரின் பெயர்கள் உள்புகுத்தப்பட்டன. இதனை விட பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தபோது 117 பேரின் பெயர்கள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக மாற்றப்பட்டன.

பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் கையெழுத்திட்டு இறுதிப் பட்டியல் என்று கடந்த மே மாதம் வழங்கிய இறுதிப் பட்டியலிலிருந்து இது வரை 304 பேரின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

அதாவது, வீட்டுத் திட்டத்துக்கு தகுதியீனமான 304 பேர் உட்புகுத்தப்பட்டிருந்தனர். மீள் காட்சிப்படுத்தலால் அவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். மீள் காட்சிப்படுத்தல் இடம்பெற்றிருக்காவிட்டால் அரசின் நிதி தவறான கையாளுகை ஊடாக 304 பேருக்குச் சென்றிருக்கும். மீள் காட்சிப்படுத்தல் ஊடாக அரச நிதி சரியானவர்களைச் சென்றடைவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

பயனாளிகள் தெரிவில் ஓரிருவரின் பெயர்கள் மாறுவது என்பது கவலையீனமான தவறுகளால் ஏற்படக் கூடியது. அது தவறானதாக இருந்தாலும், மனித வழு என்ற அடிப்படையில் அதனைப் பொறுத்துக்கொள்ள முடியும்.


ஆனால் 304 தவறான பயனாளிகளுக்கு வீடுகளை வழங்க ஒப்புதல் வழங்கியமை என்பது திட்டமிட்ட ஒரு நடவடிக்கை. இது அதிகாரிகளுக்கு தெரியாமல் நடந்திருக்காது. ஏதோ ஒரு தரப்பை திருப்திப்படுத்த, அல்லது பெற்றுக்கொண்ட உபகாரங்களுக்கு நன்றியுணர்வாக இதனைச் செய்திருக்க வேண்டும்.

வெறுமனே சரியான பயனாளிகள் இப்போது உள்வாங்கப்பட்டு விட்டனர் என்ற அடிப்படையில் இதனை விட்டு விட முடியாது. இவ்வாறு எத்தனை பயனாளிகள் தெரிவில் முறைகேடுகள்ர குளறுபடிகள் ர ஊழல்கள் இடம்பெற்றிருக்கின்றனவோ தெரியவில்லை.

ஓர் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மாவட்டச் செயலர் பதவி என்பது உலக அளவில் மதிக்கப்படும் ஒன்றாக இருந்தது. கடந்த காலங்களில் மாவட்டங்களின் நிலைமையை அறிந்து கொள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் கூட மாவட்டச் செயலரையே சந்தித்திருந்தனர். ஆனால் இப்போது மாவட்டத்தின் நிலைமையோ மாவட்டச் செயலகத்தின் நிலைமையோ தலைகீழ்.

எதுவாக இருப்பினும், தவறிழைக்கும் பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் விடுவதால், பாதிக்கப்படுவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட, வசதிகளைப் பெறுவோர் தொடர்ந்தும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கும் வழிசமைக்கின்றது.

கையும் மெய்யுமாக பிடிபட்ட இந்த வீட்டுத்திட்ட மோசடி தொடர்பில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு மாவட்டச் செயலர் பொறுப்பேற்பாரா? தன் மீதான களங்கத்தை துடைப்பாரா?




# இலவசக்கல்விக்கு பாதிப்பு ஏற்படாது கொத்தலாவல சட்டவரைவு முன்வைப்பு

## ஜனாதிபதி உறுதி என்கிறது அரசு

**கொழும்பு, ஓக. 4**

**இலவசக்கல்விக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலேயே கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவு முன்வைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவு நாளை மறுதினம் முன்வைக்கப்படாதெனவும், திருத்தங்கள் முன்வைக்கப்படாவிடின் அரச பங்காளிகள்கூட இதனை ஆதரிக்காதெனவும் வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் கேள்விகள் எழுப்பட்டன.

இவற்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவு தொடர்பில் ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான சட்டவரைவு பல தடவைகள் திருத்தப்பட்டுள்ளன. அவற்றை ஒன்றிணைத்து ஒரு சட்ட வரைவாக சமர்ப்பிப்பதே இதன் நோக்கமாகும்.

இச் சட்டவரைவு தொடர்பில் கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. ஜனநாயகத்தை, கருத்து சுதந்திரத்தை மதிக்கும் அரசு என்ற வகையில் கருத்துகளுக்கு செவிமடுத்து, தேவையான திருத்தங்கள் செய்யப்படும். ஜனாதிபதியும் உறுதியளித்துள்ளார். இலவசக்கல்விக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே சட்டவரைவு முன்வைக்கப்படும் - என்றார்.

(ஒ,44)

# பிரிட்டன் வழியில் இனி பயணிக்குமாம் இலங்கை

கொழும்பு, ஓக. 4

ஒவ்வொரு நாடாளுமன்ற அமர்விலும் முதல் நாளன்று (செவ்வாய்கிழமை) கொரோனா நிலைவரம் தொடர்பில் இனி மேல் அறிவிப்பு விடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.



நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,

'பிரிட்டன் நாடாளுமன்றத்தில் புதிய நடைமுறை பின்பற்றப்படுகின்றது. இதன்படி ஒவ்வொரு நாடாளுமன்ற அமர்வின்போதும் கொரோனா நிலைவரம் தொடர்பில் சுகாதார அமைச்சர் அல்லது பிரதமர் நாடாளுமன்றத்தில் அறிவிப்பு விடுக்க வேண்டும். எனவே, இங்கும் சுகாதார அமைச்சர் அவ்வாறு செய்வது நல்லது. அமைச்சரவை திங்கட்கிழமை கூடும். எனவே, செவ்வாய்க்கிழமை அறிவிப்பை விடுக்கலாம்' என சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர், இது நல்ல யோசனை. கேள்விகளுக்கான பதிலாக அல்லாமல், நாட்டின் உண்மை நிலைவரம் தொடர்பில் நாடாளுமன்ற அமர்வு நாள்களில் செவ்வாய்க்கிழமை அறிக்கை சமர்ப்பிக்கப்படும், என்றார்.

நாடாளுமன்றம் மாதம் இரு தடவைகள் கூடும் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சபை அமர்வு 8 நாள்கள் நடைபெறும்.

(ஒ,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீட்டு என்றால் வளங்களைக்கூட அந்நியர்களுக்குத் தாரைவாக்கலாம்

*இலங்கையின் நிலை இது என்று கடற்றொழிலாளர்கள் விசனம்*

**கிளிநொச்சி, ஓக. 4**

**இலங்கை அரசைப் பொறுத்தவரை, தொழில்நுட்பத்துக்காவும், முதலீட்டுக்காகவும் இலங்கையின் வளங்களையும், நிலங்களையும் அந்நியர்களுக்கு தாரை வார்க்கலாம் என்று பூநகரி கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.**


கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பள்ளிக்குடாவில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேச மீனவர சங்கங்களுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டுள்ள கடல்அட்டை பண்ணை தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கையில்;

இலங்கையைப் பொறுத்தவரையில் எமது ஆட்சியாளர்கள் எங்களுடைய வளங்களை பல நாடுகளுக்கு விற்கின்ற அதேவேளை பல நாடுகள் எமது வளங்களை சூரையாடுவதற்கு வழி வகுத்துள்ளனர். சீனாவின் அதிகரித்த ஆதிக்கம் வடக்கில் காணப்படுகின்ற அளவுக்கு நிலைமைகள் மாறியிருக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட கௌதாரிமுனையில் மீனவ சங்கங்களே அறியாமல் அவர்களது அனுமதியும் இல்லாமல் சீனப் பிரஜைகள் இரண்டு ஏக்கருக்கு உட்பட்ட காணிகளுக்குள்ளே அட்டைக்குஞ்சுகளை வளர்ப்பதற்கான பண்ணைகளை உருவாக்கியிருப்பது யாருடைய அனுமதி பெற்று இதை இவர்கள் செய்திருக்கிறார்கள் என்ற சந்தேகமான கேள்வியை உருவாக்கியுள்ளது. கடல்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கருத்து தெரிவித்தபோது கௌதாரி முனை கடலட்டைப் பண்ணை எங்களுக்கு தொழில்நுட்பத்தையும் முதலீடையும் தரும். ஆகவே அவர்கள் சீன பிரஜைகளா அல்லது வேறு நாட்டு பிரஜைகளா என்பதல்ல எங்களுக்கு முக்கியம். முதலீடும் தொழில்நுட்பமும் எங்களுக்கு முக்கியம் என்று கூறியிருந்தார். அவ்வாறானால் தொழில்நுட்பத்துக்காகவும், முதலீட்டுக்காகவும் எங்களுடைய நிலத்தை மற்றவருக்கு தாரைவார்த்து அல்லது விற்பது சரியான விடயமா? அரசு அபிவிருத்தி என்ற போர்வையில் எங்களுடைய வளங்களை மற்றவர்களுக்கு கொடுக்கின்ற முயற்சிகளில் ஈடுபடுகின்றதா?- என்றனர். (ப-214)



படங்கள்: ஐ.சிவசாந்தன்





நல்லூர்க் கந்தன் பெருந்திருவிழா

## கொடிச்சீலைக்கான காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.4

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நடுகைசெய்யப்பட்டு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சிமாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ஐ)

## தாதிக்கு கொரோனா

முல்லைத்தீவு, ஓக.4

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நெட்டாங்கண்டல் ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

இதை அடுத்து சக பணியாளர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 30ஆம் திகதி நெட்டாங்கண்டல் ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் பாண்டியன் குளம் செல்வபுரத்தைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குச் சென்றுள்ள நிலையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையின் போதே அவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் பணியாற்றிய நெட்டாங்கண்டல் ஆதார மருத்துவமனையில் பணியாற்றும் ஊழியர் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ப-19)

வீட்டை உடைத்து அடாவடி;

## முதியவர், பெண்களைத் தாக்கி பணம், நகைகள் கொள்ளை

*புதுக்குடியிருப்பில் சம்பவம்*

முல்லைத்தீவு, ஓக. 4

வீடு ஒன்றை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களைத் தாக்கி, நகை பணம் என்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள். இந்தச் சம்பவம் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மந்துவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. இதன்போது வீட்டில் இருந்த வயோதிபர் ஒருவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டதில் காயமடைந்த அவர் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாலிக்கொடி, பொக்ஸ் செயின் மற்றும் இரண்டு சங்கிலிகள் மற்றும் இரண் டரை லட்சம் ரூபா பணம் என்பவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப-19)

# கல்வியை இராணுவமயமாக்குவதை எதிர்த்து இன்று யாழில் போராட்டம்

*யாழ். பல்கலை முன்னால் அணிதிரளுமாறு அழைப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 4

உயர்கல்வியை இராணுவமயமாக்குவதற்கும், தனியார்மயமாக்குவதற்கும் எதிரான இன்று யாழ்ப்பாணத்தில் அமைதிப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

நாடாளாவிய ரீதியில் கல்வியை இராணுவமயமாக்குவதற்கு எதிரான மக்கள் இயக்கத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள குறித்த போராட்டம் இன்று நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலின் வெளியிலே, இராமநாதன் வீதியின் இரு மருங்கிலும் இடம்பெறவுள்ளது.

உயர்கல்வியை இராணுவமயமாக்கும் வகையிலும், தனியார்மயமாக்கும் வகையிலும் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைபு மற்றும் பல்கலைக் கழக சட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கும் திருத்தம் ஆகியவற்றை எதிர்க்கும் வகையில் நாட்டின் பல பகுதிகளிலும் கல்வியை இராணுவமயமாக்குவதற்கு எதிரான மக்கள் இயக்கம் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றது. அதில் ஒரு பகுதியாகவே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் சமூகத்தினர் உள்ளடக்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினரின் அழைப்பில் இடம்பெறும் இந்தப் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம், சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பு, வல்லமை, புதிய அதிபர் சங்கம், முற்போக்கு ஜனநாயக ஆசிரியர் சங்கம் ஆகிய அமைப்புக்கள் ஏற்கனவே தமது ஆதரவை வெளியிட்டுள்ளன.

எனவே கல்வித் துறையைச் சேர்ந்தோர், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இன்று இடம்பெறவிருக்கும் போராட்டத்திலே ஒன்றிணைந்து பங்கேற்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அனைத்து பாடசாலைகளையும் ஆரம்பிப்பதற்கு தயாராகுங்கள்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு,ஓக.4**
**அனைத்து ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஓகஸ்ட் மாத இறுதிக்குள் ஆசிரியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் கொடுக்கப்பட்ட பின்னர், பாடசாலைகளைத் திறப்பதற்கான சாத்தியம் உள்ளது.
எனவே, அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சென்று திட்டமிட்டபடி ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.
சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு விரைவில் பாடசாலைகளைத் திறப்பது நாட்டிலுள்ள பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு அவசியமான ஒன்று. அதற்கு முதற்கட்ட நடவடிக்கையாக ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி போடப்படுகின்றது. அவர்களில் 83 வீதம் பேருக்கு முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது.
50 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட ஆயிரத்து 439 பாடசாலைளும், 50 முதல் 100 மாணவர்களைக் கொண்ட ஆயிரத்து 523 பாடசாலைகளும் உள்ளன. நாட்டில் உள்ள 10 ஆயிரத்து165 பாடசாலைகளில் 2 ஆயிரத்து 962 பாடசாலைகள் 100 க்கும் குறைவான மாணவர்களைக்கொண்டவை. முதல்கட்டமாக, குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளைத் திறக்க அரசு திட்டமிட்டுள்ளது. பின்னர் படிப்படியாக ஏனைய பாடசாலைகள் திறக்கப்படும்- என்றார். (ஒ,4)

# பயணக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறை

கொழும்பு,ஓக.4
நடைமுறையிலுள்ள பயணக் க்கட்டுபாடுகள் முழுமையாக நீக்கப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.
மாகாணங்களுக்கு இடையில் நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு இதுவரையில் எந்தவிதமானத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் அரச சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மாகாணங்களுக்கு இடையில் பயணிப்போருக்கு அனுமதி வழங்கப்படும்.
நாட்டைத் தொடர்ந்து முடக்கி வைத்திருக்க முடியாது. அலுவலகங்களையும் தொடர்ந்து மூடி வைத்திருக்க முடியாது நாட்டில் நாளொன்றுக்கு சுமார் 2 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். எனவே மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை நீக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

# உயர்கல்விப் பிரச்சினைகளை ஆராய தெரிவுக்குழு அவசியம்

கொழும்பு,ஓக.4
நாட்டில் உயர்கல்வி தொடர்பில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை ஆராய, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் உயர்கல்வி தொடர்பில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடி பொதுவான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும்.
தெரிவுக்குழுவொன்றின் மூலம் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் என அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதுவே மிகவும் சிறந்த முறையாகும்- என்றார். (ஒ,4)

# தரம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஸ்பீட் போஸ்ட்டில் அனுப்பலாம்

கொழும்பு,ஓக.4
அரச பாடசாலைகளில் 2022ஆம் ஆண்டில் தரம் ஒன்றில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களை 'ஸ்பீட் போஸ்ட்' கொரியர் சேவை மூலம் சமர்ப்பிக்கலாம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

Ministry of Education
අධ්‍යාපන අමාත්‍යාංශය

பதிவுசெய்யப்பட்ட அஞ்சல் மூலம் முதலாம் தரத்தில் சேர்வதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதில் ஏற்படும் தாமதத்தைக் குறைக்க கொரியர் சேவை முன்மொழியப்பட்டுள்ளது.
இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் எதிர்வரும் 7 ஆம் திகதியுடன் முடிவடையும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ,4)

# துமிந்தவுக்கு மன்னிப்பு உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு,ஓக.4
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்பின் சட்டபூர்வத் தன்மையை சவாலுக்குட்படுத்தி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரால், உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இந்த மனு மூலம், பிரிவு 12 (1) இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சட்டத்தின் சமமான பாதுகாப்புக்காக என்ற தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இந்த மனுவின் இறுதித் தீர்ப்பு வரும் வரை துமிந்த சில்வா நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவையும் மனுதாரர் கோரியுள்ளார். (ஒ,4)

# வவுனியாவில் பல இடங்களுக்கும் பரவிப் பாய்கின்றது கொரோனா

## கைதிகள் 10 பேர் உட்பட 41 பேருக்குத் தொற்று




வவுனியா, ஓக. 4
வவுனியாவில் சிறைச்சாலைக் கைதிகள் 10 பேர் உட்பட 41 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அதில், நேரியகுளம் பகுதியில் 15 பேருக்கும், சலனிகம, மகாறம்பைக்குளம், விநாயகபுரம், புதுக்குளம், சாம்பல் தோட்டம் ,பாரதிபுரம், மெனிக்பாம், புதிய கற்பகபுர, மருதமடு , மாங்குளம், முதலியார்குளம், வைத்தியசாலை விடுதி மற்றும் இராசேந்திரங்குளம் ஆகிய பகுதிகளில் தலா ஒருவருக்கும், உடையார்கட்டு தெற்கு பகுதியில் இருவருக்கும், பட்டக்காடு, மற்றும் ஈரப்பெரியகுளம் பகுதிகளில் தலா மூவருக்கும், சிறைச்சாலைக் கைதி ஒருவருக்கும், ஒமேக்கா ஆடைத் தொழிற்சாலையில் இருவருக்கும், மாகா நிறுவனத்தைச் சேர்ந்த இருவருக்கும் என 41 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதில் 10 பேர் வவுனியா சிறைச்சாலை கைதிகளாக உள்ளனர்.
அத்துடன் தமக்கான நோய் அறிகுறிகள் தென்பட்ட நிலையில் தாமாக முன் வந்து பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டவர்களில் 10 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
(ப-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்



என்.எஸ்.தீபன்
(B.A,Dip.in.Edu, Dip.in.Teach)
ஆசிரியர், (யா/ மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்)

உதயன் கல்விப் பிரிவு

பரீட்சை இலக்கம் 2

பெயர் : ..................................... நேரம் : 1 மணித்தியாலம் பகுதி 2

**1. பின்வரும் பந்தியை நன்கு வாசிக்க.**

நாங்கள் பூக்களில் உள்ள தேனைக் குடிப்பவர்கள். எங்கள் குடும்பம் மிகவும் பெரியது. அழகிய நந்தவனமே எங்கள் இருப்பிடம். நீண்ட நாட்களாக நாங்கள் ஒற்றுமையாக அந்த நந்தவனத்தில் வசித்து வந்தோம். வண்ண வண்ணப் பூக்களின் மணமும் எமது அழகும் காண்போரைப் பரவசப்படுத்தும்.

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.**

1. பந்தியில் விபரித்துக் கூறப்படும் பிராணியின் உணவாகக் குறிப்பிடப்படுவது எது?

...........................................................................................

2. காண்போரைப் பரவசப்படுத்துபவற்றுள் ஒன்றை எழுதுக.

...........................................................................................

3. குடியிருப்பு என்னும் சொல்லின் கருத்தை வெளிப்படுத்தும் பிறிதொரு சொல்லை எழுதுக.

...........................................................................................

4. அடுக்குத் தொடர்ச் சொல் ஒன்று எழுதுக.

...........................................................................................

5. தன்மைப் பன்மை இறந்தகால வினைச்சொல் ஒன்று எழுதுக.

...........................................................................................

6. கீழ்க்காலும் சுழியும் இடம்பெற்றுள்ள எழுத்தை எழுதுக.

...........................................................................................

2. அஃறிணை ஒருமைப் பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
மீன்கள், அவன், ஓடியது, அவை, பறவை

3. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '×' எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

i. நானும் வசீரும் மைதானத்திற்குச் சென்றேன். ( )

ii. பூந்தோட்டத்தில் மலர்ந்திருந்த ஒவ்வொரு பூவும் வாசனை மிகுந்ததாக இருந்தது. ( )

4. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.
i. தம்பி பாடசாலைக்குச் செல்லவில்லையா
ii. வாசுகி நாளை எனது பிறந்த தினம் என்று கூறினாள்

5. பின்வரும் மரபுத் தொடர்கள் உணர்த்தும் கருத்தினை எழுதுக.
i. தட்டிக் கொடுத்தல் .....................................................
ii. கண் திறத்தல் .....................................................
.........

6. மருத்துவன் என்னும் சொல்லுக்குரிய எதிர்ப்பால் சொல்லை எழுதுக.

...........................................................................................

7. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

i. நாம் சூழலில் தேங்கும் உக்கும் ..................... (களிவுகளை / கழிவுகளை) குழி தோண்டிப் புதைப்போம்.

ii. இரவு வானில் ...................... (நட்சத்திரங்கள் / நச்சத்திரங்கள்) பிரகாசமாகத் தென்பட்டன.

8. பின்வரும் கருத்தைப் புலப்படுத்தும் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
சிறு வயதுப் பழக்கம் நீங்காது.

...........................................................................................

9. பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுக.
பறவைகள் வானில் பறந்து சென்றன.

...........................................................................................

10. கீழே தரப்பட்டுள்ள பிராணியின் பெண் மரபுச் சொல்லை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
மான் .....................................................................

11. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாவிற்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல் மேல் எழுத்துப் போல் காணுமே


இப்பாடலில் வந்துள்ள உவமானத்தை எழுதுக

...........................................................................................

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. Fifteen ............................ 2. Market..............................

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக

i.  ..................

ii.  ..................

14. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்திலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

i. This is ...................... (a /an ) tree.
ii. We ........................ (are / is) going to temple.

15. பிரஹஸ்பதிந்தா என்னும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

...........................................................................................

16. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
தம்பி இங்கே வாருங்கள் .......................................................


17. (5) (2) (7) (4) (1) ஆகிய ஐந்து இலக்கங்களையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணிற்கும், மிகச் சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

...........................................................................................

18. .......... [15] .......... இவ் இந்து அராபிய எண்ணிற்கு முந்திய,பிந்திய உரோம எண்ணை புள்ளிக்கோட்டில் எழுதுக.

19. களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 28350 ரின் மீன்களில் 19570 ரின் மீன்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு வியாபார நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன எனின் களஞ்சியசாலையில் எஞ்சியுள்ள ரின்மீன்களின் எண்ணிக்கை யாது?

...........................................................................................

20. 

இவ் எண்சட்டத்தினால் குறித்துக் காட்டப்படும் எண்ணின் நூறு, ஆயிரம் இடப்பெறுமானங்களில் உள்ள இலக்கங்கள் இடம் மாறுவதனால் உருவாகும் எண்ணின் பெயரை எழுதுக?

...........................................................................................


21. மண்டபம் ஒன்றின் திரைச் சீலையின் நீளம் அகலத்தின் மூன்று மடங்காகும். திரைச் சீலையின் நீளம் 9m 18 cm எனின் அதன் அகலம் யாது?

.................m .................cm

22. போத்தல் ஒன்றில் இருந்த பாலின் கனவளவு 4 l 5ml ஆகும். அதிலிருந்து 1 l 245ml பால் விருந்தினரை உபசரிப்பதற்காக பரிமாறப்பட்டது எனின் போத்தலில் எஞ்சியுள்ள பாலின் அளவு யாது?

.................l.................ml

23. பின்வரும் உருவில் அரைப் பங்கிற்கு நிழற்றிக் காட்டுக
(நிழற்றுவதற்குப் பென்சிலைப் பயன்படுத்துக)



24. தொழிலாளி ஒருவர் மு.ப 9.50 இற்கு வேலையை ஆரம்பித்து பி.ப 3.25 இற்கு வேலையை நிறைவு செய்தார். இடையில் 35 நிமிடங்களை ஓய்விற்காக அவர் செலவு செய்தார் எனின் அத்தொழிலாளி வேலை செய்த கால அளவு யாது?

............மணித்தியாலங்கள்........... நிமிடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. பின்வரும் விலைப்பட்டியலை அவதானிக்க.

| பொருள் | விலை (1 kg) |
|---|---|
| பால்மா பைக்கற் | ரூபா 425.00 |
| சீனி | ரூபா 140.00 |

i. $1\frac{1}{2}kg$ சீனியையும், மூன்று பால்மா பைக்கற்றுக்களையும் வாங்கிய ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

..........................................................................................

ii. இவ்வகைப் பொருள்களுக்காக ஒருவர் ரூபா 500 தாள் நாணயம் மூன்றை வழங்கினால் அவர் பெறும் மீதிப்பணம் யாது?

..........................................................................................

26. வேலி அடைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 60m 5cm நீளமான முட்கம்பி ஒன்றில் வேலி அடைத்து முடிய 13m 9cm நீளமான முட்கம்பி எஞ்சி இருந்தது எனின் வேலி அடைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முட்கம்பியின் அளவு யாது?

...................... m ...................... cm

27. பின்வரும் எண் ஒழுங்குத் தொடரில் அடுத்து வரும் எண்ணை எழுதுக?
i. 8,32,128, 512,............ ii. 1, 4, 9, 16, ................

28. நீளம் பாய்தல் போட்டி ஒன்றில் சுயாதா முதல் தடவை 4 m 5 cm தூரத்தையும், இரண்டாம் தடவை 5m 8cm தூரத்தையும் தாண்டினாள் எனின் அவள் இரு தடவைகளும் பாய்ந்த மொத்த அளவு யாது?

.................... m .................... cm

29. பூசணிக்காய்களை சிறு சிறு துண்டுகளாக்கி ஒவ்வொரு பொதியிலும் 5kg 5g அமையுமாறு பொதி செய்யப்பட்டது. இறுதியில் 2kg 65 g பூசணிக்காய்த் துண்டுகள் எஞ்சி இருந்தன எனின் அதனை முழுமையான பொதியாக மாற்ற இன்னும் தேவையான பூசணிக்காயின் நிறை யாது?

.................. kg .................. g

30. விற்பனை நிலையம் ஒன்றில் ஒரு வாடிக்கையாளருக்கு எட்டுப் பால்மா பைக்கற்றுக்கள் வீதம் 7572 பால்மா பைக்கற்றுக்கள் பங்கிட்டு வழங்கப்பட்டன எனின் மீதியாக உள்ள பால்மா பைக்கற்றுக்களின் எண்ணிக்கை யாது?

..........................................................

31. பொதி ஒன்றில் 68 அப்பியாசக் கொப்பிகள் இருந்தன. அவ்வாறான ஏழு பொதிகளில் உள்ள அப்பியாசக் கொப்பிகள் இரண்டு பாடசாலைகளுக்கு சமனாகப் பங்கிட்டு வழங்கப்பட்டன எனின் பாடசாலை ஒன்றிற்கு கிடைக்கும் அப்பியாசக் கொப்பிகள் எத்தனை?

..........................................................

**32 தொடக்கம் 61 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

32. தரமான தேயிலையை வெந்நீரில் இடும் போதான நீரின் மாற்றம்
(1) கபில நிறமாதல் (2) செம்மஞ்சள் நிறமாதல் (3)இளமஞ்சள் நிறமாதல்

33. தோட்டங்களில் பிராணிகளை விரட்டப் பயன்படும் முறை அல்லாதது
(1) நீர்ப்பிசாசு (2) தேன் பெட்டிகள் வைத்தல் (3) நிறரிசுக்கள், கொடிகள் கட்டுதல்

34. எனது வகுப்பிற்கு, பாடசாலைக்கு, வீட்டிற்கு நான் ஒளியாவேன். நான் ஆசிரியரின் அறிவுரைப்படி நடந்து, கல்வியில் வெற்றி பெற்றேயாகுவேன். என்பது மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின்
(1) திடசித்தம் (2) உதிப்பு (3) பிரார்த்தனை

35. இலங்கை பிரித்தானியாவின் முடிக்குரிய குடியேற்ற நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு
(1) 1815 (2) 1802 (3) 1948

36. உணவுப் பொருள்களில் வெல்லம் சேர்க்கப்படுவதனால் எமக்குக் கிடைக்கும் பிரயோசனம்
(1) உடல் வளர்ச்சி (2) சக்தி கிடைத்தல் (3) நோய் எதிர்ப்பு

37. வீட்டுத் தோட்டங்களில் பூச்சிகளை விரட்டப் பயன்படுத்தும் முறை அல்லாதது
(1) பூச்சிகளின் முட்டைகளைத் தேடி அழித்தல்
(2) சூழல் நேய பூச்சிக் கட்டுப்பாட்டுத் திரவம் தெளித்தல்
(3) தீங்கு செய்யும் பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் பூச்சிகளை அழித்தல்

38. நிலநடுக்கத்தின் போது செய்ய வேண்டியதும், இடி மின்னல் தாக்கத்தின் போது செய்யக் கூடாததுமான செயற்பாடு
(1) திறந்த வெளிகளில் நிற்றல்
(2) வீட்டின் உள்ளே இருத்தல்
(3) உயரமான மரங்கள்,கட்டடங்களின் கீழ் நிற்றல்

39. பனம் பழத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்
(1) ஒடியல் (2) பனாட்டு (3) பதநீர்

40. காயின் பிஞ்சுப் பருவத்தில் கல்லைக் கட்டி தொங்கவிடப்படும் காய் இனம்
(1) பாகல் (2) புடோல் (3) கெக்கரி

41. பண்டைய காலத்தில் கங்கா ஸ்ரீபுர என அழைக்கப்பட்ட நகரம்
(1) கண்டி (2) கம்பளை (3) அநுராதபுரம்

42. மத்திய கால சிங்களக் கலைகள் எனும் நூலின் ஆசிரியர்
(1) கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி (2) சேர்.டீ.பி.ஜயதிலக்க (3) கலாநிதி. ரீ.பீ.ஜயா

43. மண்ணினுள் புதைத்து வைப்பதன் மூலம் சில நாட்களுக்குப் பாதுகாக்கப்படும் உணவுப் பொருள் அல்லாதது
(1) கத்தரிக்காய் (2) எலுமிச்சை (3) முருங்கைக்காய்

44. சிறந்த நுட்பங்களுடன் கூடிய வியாபார நிலையங்களுக்கு வழங்கப்படும் தரச் சான்றிதழ்
(1) ISO (2) ISBN (3) SLIM

45. பலகை ஒன்றில் அலங்கார வேலைப்பாடுகள் செய்வதற்கு மிகவும் பொருத்தமான உபகரணம்
(1) உளி (2) துறப்பணம் (3) சீவுளி

46. பின்வருவனவற்றுள் உலோகக் கருவி (கஞ்சற் கருவி) கூட்டத்தினுள் அடங்குவது
(1) சல்லாரி வயலின் (2) கைத்தாளம் சலங்கை (3) கொம்பு கைத்தாளம்

47. இலங்கையில் முதலாவதாக அமைக்கப்பட்ட பசவக் குளத்தைக் கட்டிய மன்னன்
(1) தாதுசேனன் (2) பண்டுகாபயன் (3) மகாசேனன்

48. துவிச்சக்கரவண்டிக்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் பெறும் இடம் அல்லாதது
(1) பிரதேச செயலகம் (2) மாநகரசபை (3) நகரசபை

49. இலங்கையின் முதலாவது பிரதான வீதி (A1) ஆக அமைவது
(1) கொழும்பு - யாழ்ப்பாணம் (2) கண்டி - யாழ்ப்பாணம் (3) கொழும்பு - கண்டி

50. ஒரு குழுவில் சமஅளவு வீரர்கள் பங்குபற்றும் விளையாட்டுக்கள்
(1) உதைபந்து, கிரிக்கெற் (2) கரப்பந்து,வலைப்பந்து
(3) கூடைப்பந்து, உதைபந்து

51. நிறை உணவுகளில் அடங்குவன
(1) பால் மீன் (2) முட்டை இறைச்சி (3) பால் முட்டை

52. இலங்கையின் அமைவு தொடர்பான பிழையான கூற்று
(1) இலங்கை இந்தியாவிற்குத் தெற்கே அமைந்துள்ளது.
(2) இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு ஆகும்.
(3) இலங்கை கென்யாவுக்கு மேற்கே உள்ளது.

53. மலைநாட்டுப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை
(1) சாய்வுமுறைப் பயிர்ச் செய்கை (2) கலப்புமுறைப் பயிர்ச்செய்கை
(3) படிக்கட்டுமுறைப் பயிர்ச்செய்கை

54. அனைத்து அரச பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகக் கிடைக்கும் சேவைகள்
(1) மதியஉணவு பாடநூல் (2) பாடநூல் சீருடை (3) சீருடை மதிய உணவு

55. நிறச்சாயத்தில் பூக்கள், தாவரத் தண்டுகள் முதலானவற்றைத் தேய்த்து கடதாசியில் செய்யும் ஆக்கம்
(1) கொலாஜ் (2) ஒரிகாமி (3) ஸ்ரென்சில்

56. தேசப்படங்களில் ஆறுகள் காட்டப்பட்டிருக்கும் விதம்
(1) நீல நிறத்திலான மெல்லிய கோடு (2) நீலநிறத்திலான மெல்லிய வளைந்த கோடு
(3) நீலநிறத்திலான தடித்த வளைந்த கோடு

57. இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் பிராணிக் கூட்டம்
(1) தெள்ளு பேன் (2) நுளம்பு கரப்பான் (3) எறும்பு மூட்டைப்பூச்சி

58. பின்வருவனவற்றுள் மேலொட்டித் தாவர வகையைச் சேர்ந்தவை
(1) குருவிச்சை பனங்கற்றாளை (2) ஆல் குருவிச்சை
(3) பனங்கற்றாளை அரசு

59. இலங்கைக்கு உரித்தான தீவுக்கூட்டம் அல்லாதது
(1) கச்சதீவு அனலைதீவு 2) நயினாதீவு மாலைதீவு (3) நெடுந்தீவு மண்டைதீவு

60. மேல்மாகாணம், தென்மாகாணம் என்பவற்றில் கடலில் சேரும் நதிகள் முறையே
(1) களனிகங்கை மாணிக்ககங்கை
(2) வளவைகங்கை களுகங்கை
(3) களுகங்கை ஜின் கங்கை

61. ரெலிமெயில் (Tele mail) வசதியைப் பெற்றுக்கொள்ள செல்லவேண்டிய இடம்
(1) தொலைத் தொடர்பு நிலையம் (2) தபால் நிலையம் (3) புகையிரத நிலையம்

62. நாள் ஒன்றின் மாலைப்பொழுது எமக்கு ஓய்வினைத் தருகின்றது. அதிகாலை எழுந்து எமது கடமைகளையும், தேவைகளையும் உற்சாகத்துடன் நிறைவேற்றிய திருப்தியுடன் மாலைப்பொழுதை மனதிற்கு விருந்தளிக்கும் இரசனைமிக்க பொழுதாக அமைத்துக்கொள்ளல், அவசியமானதாகும். மாலைப்பொழுதின் அழகு எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டல்களும் சரியாக இருக்க வேண்டும்.)

1. ..........................................................................
..........................................................................
2. ..........................................................................
..........................................................................
3. ..........................................................................
..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வலிமை பட முதல் பாடல் 'நாங்க வேற மாரி' வெளியானது

வலிமை' படத்தின் முதல் பாடலான, 'நாங்க வேற மாரி' என்ற பாடல் வெளியாகி ரசிகர்களிடையே கொண்டாடப்பட்டு வருகின்றது.

எச்.வினோத் இயக்கி உள்ள இப்படத்தில் அஜித்துக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை ஹூமா குரேஷி நடித்துள்ளார்.

இந்தப் படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

இந்நிலையில், வலிமை படத்தின் முதல் பாடலான, 'நாங்க வேற மாரி' என்ற பாடலை நேற்றுமுன்தினம் இரவு படக் குழு வெளியிட்டது. விக்னேஷ் சிவன் எழுதியுள்ள இந்த பாடல் அஜித் ரசிகர்களை துள்ளல் போட வைத்துள்ளது. முழுக்க முழுக்க அஜித் அதிகம் பயன்படுத்தும் வாழ்க்கைத் தத்துவ வரிகளைக் கொண்டு எழுதியிருக்கிறார் விக்னேஷ் சிவன்.

"எல்லா நாளுமே நல்ல நாளுதான்
எல்லா நேரமும் நல்ல நேரம்தான்
எல்லா ஊருமே நம்ம ஊருதான்
எல்லா பயலும் நல்ல பயதான்"

என கருத்து சொல்வதுடன் பாடல் தொடங்குகிறது.

திருவிழாவில் அஜித்தின் அறிமுகப் பாடலாக அமைந்துள்ள, இப்பாடல் ரசிகர்களுக்கு பெருவிழாவாக அமைந்திருக்கிறது. இதனை அஜித் ரசிகர்கள் இந்த பாடலை சமூக வலைதளங்களில் ட்ரெண்டாக்கி வருகின்றனர்.

பேஸ்புக் பிரபலம்

**படிக்கத் தெரியாத ஈ புத்தகத்தை காலால் தொட்டுப் வாசிக்கிறது!**

கையில் இருக்கும் போனின் தரங்கள் வேறுபடலாம் ஆனால் தந்தையரின் பாசங்கள் வேறுபடுவதில்லை...






# மெடில்டா ஏமாற்றம்

## இறுதி நம்பிக்கையும் தகர்ந்தது

ஒலிம்பிக் குதிரையேற்ற போட்டியில் இலங்கைக்குப் பதக்கம் வென்று தருவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மெடில்டா கால்ஸன் முதல் சுற்றுடன் தோல்வியடைந்து வெளியேறினார். இதையடுத்து ஒலிம்பிக் தொடரில் இலங்கைக்குப் பதக்கம் கிடைக்கும் என்றிருந்த இறுதி நம்பிக்கையும் தகர்ந்தது.

பிறந்து சில நாள்களில் இருந்து ஜேர்மனியில் வசித்து வந்தாலும், தன் சொந்த நாடான இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்தார் மெடில்டா. இலங்கை மதிப்பில் சுமார் 142 கோடி ரூபா பெறுமதியான குதிரையுடன் அவர் களமிறங்கினார். இத்தனை பெறுமதியான குதிரையுடன் களமிறங்குவது வெறும் கையுடன் திரும்புவதற்கு அல்ல என்று அவர் தெரிவித்திருந்தார். இதனால் மெடில்டா மீது பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் அவர் முதல் சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறினார்.

இதையடுத்து இலங்கைக்கு ஒரு பதக்கமாவது கிடைத்துவிடும் என்றிருந்த இறுதி நம்பிக்கையும் தகர்ந்தது.

## மகனுக்காக பாலம் அமைத்த தாய்



சீனாவில் உள்ள ஹெனான் மாகாணத்தைச் சேர்ந்த, மெங் என்ற பெண், தன் மகன், பாதுகாப்பாக, பள்ளிக்கு செல்ல வேண்டும் என்பதற்காக, ஒரு கோடி ரூபாய் செலவில், சாலையின் குறுக்கே, இரும்பு மேம்பாலம் கட்டியுள்ளார்.

இந்த பெண்ணின் மகன் படிக்கும் பள்ளி, போக்குவரத்து நெருக்கடி அதிகம் உள்ள சாலையின் ஓரத்தில் அமைந்துள்ளது.

இந்த பள்ளிக்கு செல்லும் குழந்தைகள், சாலையை கடப்பதற்கு அதிகம் சிரமப்பட்டனர்.

இங்கு மேம்பாலம், 'சிக்னல்' எதுவும் இல்லாததால், பெற்றோர், ஒருவித பீதியுடனேயே, தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் சென்று வந்தனர்.

இந்த பிரச்சினையை போக்குவதற்காக, மெங், தன் சொந்த செலவில், இரும்பு மேம்பாலம் கட்டியுள்ளார். "என் குழந்தைக்கு மட்டுமல்லாமல், எல்லா குழந்தைகளின் பாதுகாப்பையும், இந்த பாலம் உறுதி செய்கிறது. இது, எனக்கு மகிழ்ச்சி..." என்கிறார், மெங்.



## இன்றைய நாள்

**மேடம்:** கோபத்தைக் கட்டுப்படுத்துவது நல்லது. பொறுமையுடன் இருங்கள். சகோதரர்களால் நன்மை உண்டு. உற்சாகமும் வேகமும் அதிகரிக்கும். வருமானம் உயரும். நன்மையளிக்கும் வாய்ப்பு தேடிவரும்.

**இடபம்:** பிடித்தவர்களிடம் முகத்தை தூக்கி வைத்துக் கொள்ள வேண்டாம். நண்பர்களுக்கு உதவுவீர்கள். பெற்றாரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். நிம்மதியடைவீர்கள்.

**மிதுனம்:** தான் என்ற அகங்காரம் தலைதூக்காமல் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தினருடன் உற்சாகமான பொழுது போக்குகளில் ஈடுபடுவீர்கள். கவலைகள் அநாவசியமாக வரும்.

**கடகம்:** பலநாள் விரும்பிய வெளிநாட்டு வாய்ப்பு வந்து மகிழ்ச்சி தரும். திடீர் நன்மை கிடைக்கும். செலவுகள் அதிகரிக்கும். நிம்மதி உண்டு. குடும் பத்தினரின் செயல்பாடுகளால் நன்மையும் மகிழ்ச்சியும் வரும்.

**சிம்மம்:** தனிப்பட்ட கவர்ச்சி அதிகரிக்கும். மனதில் காதல் உண்டாகலாம். திடீர் வேலை வாய்ப்பு வரும். உடல்நிலை சீராக இருக்கும். தேவையற்ற விஷயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம்.

**கன்னி:** வெளிநாட்டிலிருந்து வேலை வாய்ப்பு/வருமானம்/லாபம் கிடைக்கும். நம்ப வேண்டியவர்களை நம்பாமல் இருப்பது கூடாது. பணிச்சுமை அதிகரிக்கும். கவனமாக இருங்கள்.

**துலாம்:** விளையாட்டாகக் கூடத் தீமையளிக்கும் செயல்களில் ஈடுபடாதீர்கள். சுபநிகழ்ச்சிகள் காரணமாக பிரிந்த குடும்பங்கள் மீண்டும் இணையும்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத் துணைக்குப் பிடிக்காத செயல்களைச் செய்ய வேண்டாம். புதிய நட்பால் நன்மையும் லாபமும் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகளால் சந்தோஷம் காண்பீர்கள்.

**தனுசு:** திடீர் செலவு ஏற்படும். எதிர்பாராத வேகத்தில் சுபவிஷ யங்கள் நடக்கும். நன்மைகளைப் பெற முனைப்பாக முயற்சி செய்வீர்கள். குடும்பத்தினரை மகிழ்விக்கும்.

**மகரம்:** வாழ்க்கை மற்றும் எதிர்காலம் பற்றிய வீண் பயம் நீங்கும். நவீனமான வாகனம் வாங்குவீர்கள். புது விஷயங்களில் ஆர்வம் கூடும். நண்பர்கள் உதவுவர்.

**கும்பம்:** பலநாள் கழித்து மனதில் நிம்மதியும் அமைதியும் நிலவும். இளமைக்கால நண்பர்களைப் பார்த்துப் பேசி மனம் நெகிழ்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமும் கோபமும் மாற்றி மாற்றி வரும். புதிதாக வருமானம் வரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## நாடாளுமன்றை நோக்கி ராகுல் சைக்கிள் பேரணி!

புதுடில்லி, ஓக.4
பெகாஸஸ் சர்ச்சை தொடர்ந்து நீடித்து வருகின்ற நிலையில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றம் நோக்கி சைக்கிள்களில் பேரணியாக சென்றுள்ளனர். பெகாஸஸ் விவகாரம் தொடர்பாக சபையில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றனர். எதிர்க்கட்சிகளின் அமளியால் அவை நடவடிக்கைகளும் அவ்வவ்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளன. 107 மணி நேரம் நடந்திருக்க வேண்டிய நாடாளுமன்ற அமர்வுகள் 18 மணிநேரம் மாத்திரமே நடத்துள்ளது. இதற்கிடையில் எதிர்க்கட்சி கள் நாடாளுமன்றம் நோக்கி சைக்கிள் பேரணியொன்றை முன்னெடுத்துள்ளன. (ஏ-இ)

# கொவிட் 3ஆவது அலை இந்த மாதம் அடிக்கும்!

### நிபுணர்கள் எச்சரிக்கை



**புதுடில்லி, ஓக.4**
**இந்தியாவில் கொரோனா தொற்றின் மூன்றாவது அலை இந்த மாதத்தில் ஏற்படக்கூடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கணித அடிப்படையில் நடத்தப்பட்ட அவர்களது ஆய்வின்படி, 3 ஆவது அலை ஆரம்பிக்கும்போது தினசரி தொற்று எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் குறைவாகவே இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அலையின்போது தினசரி தொற்று நான்கு இலட்சத்தை தாண்டியது போன்று 3ஆவது அலை தீவிரமாக இருக்காது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
10 மாநிலங்களில் புதிய தினசரி கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளது என்று இந்திய மத்திய அரசு அண்மையில் எச்சரித்திருந்தது.
10 சதவீதத்துக்கும் அதிகமான நேர்மறையான விகிதம் கொண்ட மாவட்டங்களில் கடுமையான கட்டுப்பாடுகளையும் ஆய்வாளர்கள் பரிந்துரைத்துள்ளனர். (ஏ-இ)




## ஸ்புட்னிக் வி தடுப்பூசி இந்தியாவில் தயாரிப்பு

புதுடில்லி, ஓக.4
ரஸ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசியை செப்ரெம்பர் மாதம் முதல் இந்தியாவில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ரெட்டிஸ் லேபராட்டரி நிறுவனம் தெரிவித்துள்ளது.
இந்த தடுப்பூசியின் டோஸ்கள் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதங்களில் கிடைக்கும் எனவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.
இந்தியாவில் சுமார் 80 நகரங்களுக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசி அனுப்பி வைக்கப்படுகின்றது என்றும், நாடு முழுவதும் உள்ள சுமார் 300 மருத்துவமனைகளை தொடர்புகொண்டு விநியோகிக்கப்படுகின்றது என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.
அதேநேரம் இந்த தடுப்பூசி கொரோனாவுக்கு எதிராக 91.6 சதவீதம் பலனளிக்கின்றது என்று மூன்றாம் கட்ட பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (எஇ)

## ஊரடங்கை மீண்டும் ஏற்படுத்த வேண்டாம்

*தமிழக முதலமைச்சர் வேண்டுகோள்*



புதுடில்லி, ஓக.4
மீண்டும் ஊரடங்கை நடைமுறைப்படுத்தும் சூழலுக்கு அரசை நிர்பந்திக்க வேண்டாம் என பொதுமக்களிடம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.
சமூகவலைத்தள பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொலியில் தெரிவிக்கையில்,
முகக்கவசம் அணியாமல் செல்வது, கூட்டமாக செல்வது வேதனை தருகிறது. குறிப்பிட்ட சில இடங்களில் கூட்டம் சேருவது கண்டறியப்பட்டால் அந்த பகுதியை மூடும் நடவடிக்கையை எடுக்கலாம் என மாவட்ட ஆட்சியர்களை அறிவுறுத்தியுள்ளேன். கூட்டமாக கூடுவதன் மூலமாக கொரோனா பரவலுக்கு மக்களே காரணமாகி விடக்கூடாது என மீண்டும், மீண்டும் வலியுறுத்துகிறேன். மீண்டும் ஊரடங்கு சூழலுக்கு அரசை நிர்பந்திக்காதீர்கள்- என்றார். (ஏ-இ)

## இந்தியா முழுவதும் 24 போலி பல்கலைகள்

புதுடில்லி, ஓக.4
இந்தியா முழுவதும் 24 போலி பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. உத்தரப் பிரதேசத்தில் மட்டும் 8 பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வந்துள்ளன என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பா.ஜ.க உறுப்பினரான தர்மேந்திரன் எழுத்துமூலம் மக்களவையில் பதிலளித்துள்ளார். யு.ஜி.யின் அனுமதி பெறாமல் இயங்கி வரும் மேலும் இரண்டு பல்கலைக்கழகங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்சமாக எட்டு, புதுடில்லியில் ஏழு, ஒரிசா மற்றும் மேற்கு வங்காளத்தில் தலா இரண்டு பல்கலைக்கழகங்கள் போலியாக செயற்பட்டு வந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்த பல்கலைக்கழகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாநில அரசுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

## அஸாம், மிசோரம் சிக்கலுக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு!

புதுடில்லி, ஓக.4
அஸாம் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு இடையிலான எல்லை பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுக் காண வேண்டும் என உள்துறை அமைச்சர் அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.
இதன்பின்னர் இது குறித்து அஸாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா இட்டுள்ள ருவிற்றர் பதிவில், எல்லைப் பிரச்சினை குறித்து விவாதங்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். இதனையே மிசோரம் முதலமைச்சர் ஜோரம் தங்காவும் வலியுறுத்தியுள்ளார். அதேநேரம் சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஏ-இ)

## மகாராஷ்டிராவிலும் ஜிகா வைரஸ் தொற்று

புதுடில்லி, ஒக.4
கேரளாவை தொடர்ந்து மகாராஷ்டிராவிலும் ஜிகா வைரஸ் தொற்றின் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் உள்ள புரந்தர் என்ற பகுதியை சேர்ந்த ஐம்பது வயது பெண் ஒருவருக்கே ஜிகா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.
இருப்பினும் இந்தப் பெண் பூரணமாக குணமடைந்துள்ளமையால் யாரும் அச்சப்படத் தேவையில்லை என சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.
இதேவேளை ஏடிஸ் வகை நுளம்புகளால் பரவும் இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்படும் பலருக்கு அறிகுறிகள் எதுவும் தென்படாது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்களுக்கு நன்றி: உலக சுகாதார நிறுவனம் தெரிவிப்பு



கொழும்பு,ஓக.4

**கொரோனாத் தடுப்பூசி செலுத்தலுக்கு வழங்கும் ஒத்துழைப்புக்களுக்கு, இலங்கையர் அனைவருக்கும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசஸ் நன்றி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் தனது ருவிற்றர் பக்கப் பதிவில் தெரிவிக்கையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னதாக இலங்கை தனது மக்கள் தொகையில் 10 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி போடுவதால் மகிழ்ச்சியடைகின்றேன். இதற்காக இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் நன்றி. எனினும் கொரோனா வைரஸை அடக்குவதற்காக நிரூபிக்கப்பட்ட பொதுச் சுகாதாரம் மற்றும் சமூக நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும்- என்றார். (ஒ.4)



## டெல்டாவிலிருந்து பாதுகாக்க இரு டோஸ்களும் அவசியம்

கொழும்பு,ஓக.4

பயங்கரமான, ஆபத்தான டெல்டா வைரஸிலிருந்து பாதுகாப்பதற்கு, கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெறுவது அவசியம் என்று சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் துறை பீடத்தின் பிரதானி, மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அஸ்ராஜெனகாவின் இரண்டாவது டோஸை எப்போது பெறுவது என்பதில் மக்களுக்கு குழப்பங்கள் உள்ளன. இரண்டாவது டோஸைப் பெற்றுக் கொள்வதற்கான காலம் நிறைவடைந்திருந்தாலும், இரண்டாவது டோஸை இனியும் காலந்தாழ்த்தாது பெற்றுக்கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)



## ரவிக்கு எதிரான வழக்கு செப்ரெம்பரில் விசாரணை

கொழும்பு,ஓக.4

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோருக்கு எதிரான வழக்கின் சாட்சி விசாரணைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படும் என்று கொழும்பு மேல்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதிகளான ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன் அலோசியஸ் ஆகிய இருவரும் மன்றில் முன்னிலையாகினர். ரவி கருணாநாயக்க சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, வழக்கில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியம் தொடர்பில், அதனை ஆராய தமக்கு சந்தர்ப்பம் வேண்டும் என்று கோரினார்.

இந்த நிலையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சார்பில் மன்றில் முன்னிலையாகும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அரச சட்டவாதி லக்மினி ஹிரியாகம, அந்தக் கோரிக்கைக்கு அனுமதியளிக்குமாறும், இல்லையேல் வழக்கு தொடர்ச்சியாக ஒத்தி வைக்கப்படும் நிலையே உருவாகும் என்றும் மன்றில் குறிப்பிட்டார்.

அதனால் சாட்சியாக முறைப்பாட்டாளர் தரப்பு முன்வைக்க எதிர்பார்த்துள்ள கணினிச் சாட்சிகளை ஆராய சட்டத்தரணிக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன் அலோசியஸ் ஆகிய இருவருக்கும் எதிராக மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில், பேசுபொருளான மொனார்க் தொடர்மாடி சொகுசு குடியிருப்பை மையப்படுத்தி, இலஞ்ச ஊழல் விசாரணை சட்டத்தின் 19 (உ) பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முதலாம், 2 ஆம் பிரதிவாதிகளாக முறையே ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (ஒ.4)

## பிலியந்தல தபாலகத்தில் 18 பேருக்குக் கொரோனா

கொழும்பு,ஓக.4

பிலியந்தல பிரதான தபால் அலுவலகத்தின் ஊழியர்கள் 18 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த தபால் அலுவலகத்தில் இருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டதை அடுத்து 55 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு, அவர்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## 10 மில்லியன் பேருக்கு முதற்கட்ட தடுப்பூசி



கொழும்பு,ஓக.4

நாட்டில் இதுவரை 10 மில்லியனுக்கும் மேற்பட்டோருக்கு முதற்கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை 22 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

இவற்றில் 30 வயதுக்கு மேற்பட்டோரில் 86 வீதமானோருக்கு முதற்கட்ட தடுப்பூசியும், 20 வீதமானோருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளது என்றும் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ.4)





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூரான் செம்மணி வளைவின் சுற்றுசூழல் தூய்மைப்படுத்தும் பணிகள் கடந்த முதலாம் திகதி முன்னெடுக்கப்பட்டன.

படங்கள்: ஐ.சிவசாந்தன்

# கொரோனாத் தொற்றுக் காலத்தில் இலங்கை வங்கிக்கு பெரும் இலாபம்

கொழும்பு,ஓக.4

கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலும், இலங்கை வங்கி இந்த வருடம் முதலாவது காலாண்டுக்குள் 9 ஆயிரத்து 656 மில்லியன் ரூபா வரியற்ற இலாபத்தை ஈட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் நடைபெற்ற அரச நிதி பற்றிய குழுவில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டு இந்த வங்கி 29 ஆயிரத்து 685 மில்லியன் ரூபாவை வருடாந்த இலாபமாக ஈட்டியுள்ளது. 2020ஆம் ஆண்டு வருடாந்த இலாபமாக 23 ஆயிரத்து 552 மில்லியன் ரூபா ஈட்டியுள்ளது.

நிதி அமைச்சால் 2021 நடுப்பகுதி வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை அரச நிதி பற்றிய குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டபோது இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி செலுத்தலில் துரிதம் பின்னணியில் தேர்தல் இலக்கு

## சந்தேகம் வெளியிட்டது ஐ.ம.சக்தி

**கொழும்பு,ஓக.4**

**தடுப்பூசி செலுத்தும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுவதற்கான நோக்கம் மாகாண சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டதா என்ற சந்தேகம் நிலவுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தடுப்பூசி வழங்கும் பணிகள் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டதாக இருக்க வேண்டுமே தவிர , அரசின் நிகழச்சி நிரலை இலக்காகக் கொண்டதாக இருக்கக்கூடாது. அரச ஊழியர்கள் சகலரும் தற்போது பணிக்கு அழைக்கப்பட்டுள்ளதோடு, மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாருடைய தேவைக்காக இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டது என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

உலக சுகாதார ஸ்தாபனம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்பன நாடு அபாய நிலையில் உள்ளது என்று கூறுகின்றன. ஆரம்பத்தில் இவ்வாறான எச்சரிக்கைகளை அரசு புறக்கணித்தமையே சில மாதங்களுக்கு நாட்டை முடக்க வேண்டிய சூழலைத் தோற்றுவித்தது.

மக்களை அபாயத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். அபாயத்தை உணராமல் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது பொருத்தமற்றது- என்றார். (ஓ,4)



# பிளாஸ்டிக் கழிவுகளை அகற்ற சிங்கப்பூர் நிறுவனம் உதவி

கொழும்பு,ஓக.4

இலங்கையில் பிளாஸ்டிக் கழிவுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக, சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட உலகளாவிய இலாப நோக்கமற்ற கூட்டமைப்பு இயந்திரங்களை கையளித்துள்ளது.

கடற்கரையைச் சுத்தம்செய்யும் 8 பீச் டெக் ஹைட்ரோ ஸ்வீபி இயந்திரங்கள், இலங்கையின் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.

வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, கடலோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்வான நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா மற்றும் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணைக் குழுவின் தலைவர் திருமதி. தர்ஷனி லஹந்தபுர ஆகியோரிடம் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த இயந்திரங்கள், பிளாஸ்டிக் மற்றும் ஏனைய வகை கழிவுகளை திறம்பட மற்றும் திறமையாகச் சுத்தம் செய்யும் திறன் கொண்டவை.

அபாயகரமான பொருள்களுடன் மனிதத் தொடர்பைக் குறைப்பதன் மூலம், பாதுகாப்பான முறையில் கடற்கரையைச் சுத்தம்செய்ய உதவுவது இந்த இயந்திரத்தின் மற்றுமொரு நன்மை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மேற்குக் கடற்கரையில் மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளைச் சுத்தம்செய்வதற்கு இந்த இயந்திரங்கள் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ,4)

# நெருக்கடியான தருணத்திலும் அபிவிருத்திகள் தடைப்படாது

## நிமல் லன்சா நம்பிக்கை

கொழும்பு,ஓக.4

கொரோனாத் தொற்றின் காரணமாக பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், பொருளாதார மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தவணைக் கடன் மற்றும் வட்டி தொகை ஆகியவற்றை உரிய நேரத்தில் செலுத்தியுள்ளமை அரசுக்குக் கிடைக்கப்பெற்ற வெற்றியாகும். இதன் மூலம் நிதிச் சந்தை மீதான நம்பிக்கையை அரசு மீளக் கட்டியெழுப்பியுள்ளது. இது நாட்டின் பொருளாதார நிர்வாகத்தின் சாதகமான அம்சமாகும்.

தடுப்பூசி வழங்கல் மற்றும் கொவிட் கட்டுப்படுத்தல் செயற்பாடுகள் விரைவாகவும், வெற்றிகரமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களைப் பாதுகாக்கும் பணிகளை அரசு தடையின்றி முன்னெடுத்து வருகின்றது.

எதிர்க்கட்சியினர் கூறுவது போன்று இனியும் நாட்டை முடக்கினால், பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது. நாடு வழமைக்கு திரும்ப வேண்டும் என்பதையே மக்களும் எதிர்பார்க்கின்றனர்- என்றார். (ஓ,4)



# ஊழியர் சேமலாப நிதியிலிருந்து எடுக்கும் பணத்துக்கு வரியில்லை

*வெளிவரும் தகவல்கள் பொய்யானவை*
*நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 4

ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பணம் எடுப்பதற்கு எந்த விதமான வரியையும் விதிப்பதற்கு திட்டமிடவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பணம் எடுத்தால் அதற்கு வரி விதிக்க அரசு நகர்வுகளை முன்னெடுத்துள்ளது என்று அண்மைக்காலமாக செய்திகள் வெளிவந்தன. இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண கேள்வி எழுப்பியிருந்தார்.

குறித்த கேள்விக்கு பதிலளிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இவ்வாறு தெரிவித்தார். மேலும் ஊழியர் சேம நிதிக்கு வரி விதிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் பொய்யானவை என்றும் குறிப்பிட்டார். (ம)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 16 . 05 . 1940 | 05 . 07 . 2021 |

" உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான் 11 : 25

**இரக்கம் நிறைந்த இறைவா.!**

இவ்வுலக வாழ்விலிருந்து விண்ணுலகத்துக்கு அழைத்துக் கொண்ட உமது அடியார்

**அமரர் முடியப்பு ஞானமுத்து (மணியம்)**

அவர்களின் பாவங்களை மன்னித்து, உமது வான் வீட்டில் ஏற்று, நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

**நன்றி நவிலல்**

பண்பின் திருவுருவாய்
பாசமிகு கணவனாய்
பாசமிகு தந்தையாய்
பாசமிகு மாமனாய்
பாசமிகு பேரனாய் எம்முடன் வாழ்ந்த தெய்வத்தை நாம் இழந்து தவித்த போது நாற்திசையிலிருந்தும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறுதலும், தேறுதலும் அளித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கல்வியியற் கல்லூரி வீதி,**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 01 . 04 . 1939 | 03 . 08 . 2021 |

**திரு. இராமநாதன் கந்தசாமி**

**( சில்வியா ஸ்டோர்ஸ் உரிமையாளர் )**

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கிராண்பாஸ் வீதி, கொழும்பு - 14ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த **திரு. இராமநாதன் கந்தசாமி** அவர்கள் நேற்று (03.08.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநதன் - நாகம்மா தம்பதியரின சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான குலசேகரம்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லீலாவதியின் அன்புக் கணவரும் சசிகுமார் (ஜேர்மனி), சசிகலா (நோர்வே), சாந்தநிதி (லண்டன்), காலஞ்சென்ற சந்திரகுமார், சரண்யா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோபனா (ஜேர்மனி), மதியழகன் (நோர்வே), காந்தரூபன் (லண்டன்), சாந்தினி (கொழும்பு), ரஜீந்திரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கனகாம்பிகை (சுவிஸ்), அம்பிகாவதி (நோர்வே), இரத்தினசிங்கம் (சுவிஸ்), சரோஜினிதேவி (இலங்கை), தவமணி காந்தி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை, காலஞ்சென்ற இரத்தினசிங்கம், பரமேஸ்வரி (சுவிஸ்), கனகலிங்கம் (இலங்கை), திருநாவுக்கரசு (இலங்கை), தம்பிஐயா (கனடா), காலஞ்சென்ற சிவபாலன் , புனிதவதி (இலங்கை), இந்திராணி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌசிகா, டிலக்ஸனா, லதீசன், [illegible], விதுஜா, விரிஷா, கனிஸ்கா, துஷாந்த், டவிஷா, [illegible] ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு...**
**011 245 4723 - வீடு**
**077 867 6677 - மகள்**

**தகவல் : குடும்பத்தினர்**
**இல. 29, கிராண்பாஸ் வீதி,**
**கொழும்பு - 14**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்**

## முகாமையாளர்
### பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முகாமையாளர் (ஆண்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.
விண்ணப்பதாரிகள் சைவபாரம்பரியம் உள்ள சைவர்கள், சைவபோசனம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பமுடிவு திகதி 18.08.2021**

**விண்ணப்பிக்கவேண்டிய முகவரி :**
**பெறுநர்குழு**
**மருதடி விநாயகர் ஆலயம்,**
**மானிப்பாய்.**

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05.08.1945 — இறப்பு 06.08.2010



**அமரர் இரத்தினம் பொன்னம்பலம்**
திதி: தேய்பிறை ஏகாதசி

ஆண்டுகள் பதினொன்று ஆனாலும் தந்தையே
உங்கள் அன்பின் அரவணைப்பு என்றும் எம்மனதை விட்டகலாது
எமது ஈரவிழி நீரால் உங்கள் பாதமலர் இறைஞ்சுகின்றோம்
உங்கள் நிழல் என்றும் எம்மனதிலே நிலைத்திருக்கும்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

**Lovely Flower Centக்கு**
**வேலையாள்கள் தேவை**
நெல்லியடியில் இயங்கும் கிளைக்கு
பெண் வேலையாள்கள் தேவை.
வயதெல்லை - 18 -30
**T.P.: 077 400 5023**

**வேலை ஆள் தேவை**
அரைக்கும் ஆலை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலை ஆள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 957 4934**

## 28ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 13.02.1929 — உதிர்வு 20.12.1993



திதி: ஸப்தமி

**இளையதம்பி கந்தசாமி**

## 24ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19.11.1961 — உதிர்வு 30.07.1997



திதி: ஏகாதசி

**மைதிலி கந்தசாமி**

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15.01.1930 — உதிர்வு 09.03.2014



திதி: நவமி

**கந்தசாமி மங்கையர்க்கரசி**

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகைபல செய்து
பண்புடைமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்கள் காலங்கள் கடந்தாலும் நினைவுகள் தொடர்கின்றன.

ஞானபண்டித பாடசாலை அருகில்,
கொக்குவில் மேற்கு.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இராசையா செல்லம்மா



சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா செல்லம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்கள்ளான ஆறுமுகம் - மரகதமணிஅம்மா (பொன்னாச்சி) தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற ஆறுமுகம் இராசையாவின் அன்பு மனைவியும், கிருஷ்ணாம் பாள் (இணுவில்), ரகுநாதன் (ஜேர்மனி), திருநாவுக்கரசு (ரவி - சுவிஸ்), சசிதேவி (ஜேர்மனி), மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோ ரின் அன்புத் தாயும், சோமசுந்தரம் (அபிராமி பெஷன் ஹவுஸ்),உலகேஸ்வரி (ஜேர்மனி), அமிர்தகௌரி (சுவிஸ்), சிவலிங்கம் (ஜேர்மனி), பொற் செல்வி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், காலஞ் சென்றவர்களான நாகம்மா, சாந்தலிங்கம், பொன்னையா ஆகியோ ரின் சகோதரியும், தர்ஷினி - வரதராசா, தயாளினி கருணாகரன், சயந்தி - அனுசீலன், ரகிதா - ரஜிவன், யசிந்தா மகிந்தன், யானு - விமல், ரஜீவன் - ஜானு, மயூரன், டேறிஜா, தனுஷா - மைக்கல், எழிலன், ரமணன், கஜந்துசி, அருண் - ஜீவிதா, ஜெகன் - எலிசபெத், லக்ஷி, சபீனா, சகிஷன், சதுர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும், வினுஜா, தணி கன், அஸ்வின், அஸ்வீகா, ரித்திகா, ரித்திகன், வர்ஷன், வர்ஷினி, அபிலாஷ், கைலாஷ், எலியாஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 24.06.1929 — மறைவு 03.08.2021

கே.கே.எஸ். றோட்,
இணுவில் கிழக்கு,

**தகவல்:**
மகன் - திருநாவுக்கரசு (ரவி)
மருமகன் - சோமசுந்தரம் (அ.பெ.ஹ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபைநிதி - 2021

1. சபைநிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப் பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்த மான தரத்தில் இக்ராட் / சீடா (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் Bidding Data and Contract Data **கேள்வி ஆவணம்** பகுதி V இல் காட்டப் பட்டுள்ளது.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலை பேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.என்னும் இடத்தில் **04.08.2021 ம் திகதியிலிருந்து 25.08.2021 ம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 வரை** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.10000/= **(வரிநீங்கலாக)** இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர்,வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு **26.08.2021 ம் திகதி மு.ப 10.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியா கவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிரா கரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

9. கோரப்பட்ட வேலைகள் கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து **77 (எழுபத்து ஏழு – 11.11.2021)** நாட்களாகும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | சுழிபுரம் உப அலுவலகம், ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் நூலக நிர்மாணம் NP/14/41(17)/02/CF/Chu Bu/2021 | 19.704 Mn | 180 நாட்கள் | C6 / C5 கட்டடம். | 197,100.00 | 09.12.2021 |

11. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவல கத்தில் 16.08.2021 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்த காரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

**த.நடனேந்திரன்**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**
**04.08.2021**

## நேற்று 2,423 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஓக. 4

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 423 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடை யாளம் காணப்பட்ட கொரோனாத் தொற் றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 16 ஆயிரத்து 192ஆக அதிக ரித்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,902 பேர் குணமடைந்து சிகிச்சை நிலையங் களிலிருந்து நேற்று வெளியேறியுள்ள னர். இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணம டைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 82 ஆயிரத்து 770ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

## மேலும் 74 பேர் உயிரிழப்பு கொரோனா இறப்பு உச்சம்!

கொழும்பு, ஓக. 4

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 74 பேர் சாவடைந் துள்ளனர் என்று அறிக்கையிடப் பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தக வல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரம் வெளியி டப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 645ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 74 பேரில் 48 ஆண்களும், 26 பெண்க ளும் அடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள் ளது. (ம-22)

## நீங்காத நினைவலைகள்

**2ஆம் ஆண்டு** **12ஆம் ஆண்டு**

மண்ணில் 14.04.1926
விண்ணில் 28.07.2019





மண்ணில் 15.06.1931
விண்ணில் 23.06.2009

**கரம்பன் மேற்கு**

அமரர் **கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**
திதி: அபரபக்க ஏகாதசி (ஆடி)

அமரர் **சதாரூபவதி பாலசுப்பிரமணியம்**
திதி: பூர்வபக்க பிரதமை (ஆனி)

ஆண்டு இரண்டு ஆனதுவோ அப்பா ஆறவில்லை எம் துயரம்
நீங்கள் இல்லாத இடம் எமக்கு நிலையான வெற்றிடமே
குடும்ப குலவிளக்காய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே!
ஈராறு ஆண்டுகள் சென்றாலும் ஆறாது உங்கள் பிரிவுத்துயர்

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ/து)

**பதிவுத்திகதி : 1971.01.09** **பதிவு இல. VA/260**

## கீழ் வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

**01. பதவி** - கிராமிய வங்கி முகாமையாளர்

:- சம்பளக்குறியீட்டு இலக்கம் - 205/09
:- 4/2018இன் படி சம்பள அளவுத்திட்டம்
:- 18010-220 x 10 - 230 X 10 - 22510

**கல்வித்தகைமைகள் :**

அ) கூட்டுறவு பணியாளர் 10வது சம்பளத்திட்ட கிராமிய வங்கிப் பகுதி பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவு பணியாளர் 11வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) இலங்கை வங்கியாளர் நிறுவன வங்கி அலுவல்கள் பற்றிய பரீட்சையில் டிப்ளோமா சான்றிதழ் பகுதி - 1 உடன் வங்கி அலுவல்கள் பற்றிய மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

இ). அங்கீகரிக்கப்பட்ட அல்லது பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் வர்த்தக வங்கி அலுவல்கள் பற்றி இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஈ). கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் வங்கி பகுதி அல்லது கிராமிய வங்கிப் பகுதி மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.


**பதவிக்கான பொதுவான நிபந்தனைகள்**

1. பதவியின் தன்மை - நிரந்தரமானது.
2. வயதெல்லை - 18-45 (தற்போது சேவையில் உள்ள கூட்டுறவு ஊழியர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)
3. விண்ணப்படிவத்தை பூரண தகவல்களுடன் சுயமாக தயாரித்து இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.
4. கூட்டுறவுச் சங்கமொன்றில் வெற்றிடம் நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது பிறிதொரு கூட்டுறவுச் சங்கத் தில் சேவையாற்றுபவரின் விண்ணப்பமானது உரிய சங்கத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. அத்துடன் எவரேனும் ஒருவர் கூட்டுறவுச்சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பத் தினை சமர்ப்பித்துள்ளார். என அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரிய வருமேயாயின் பதவி இழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்.
6. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி - **17.08.2021**
7. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி - **தலைவர் வ.ப.நோ.கூ.சங்கம், பொதிமண்டப வீதி, வவுனியா.**
8. ஊழியருக்கான சலுகை :- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக இதர படிகள் இயக்குனர் சபைத்தீர்மானத்திற்கு அமைவாக வழங்கப்படும்.

**தலைவர்**
**வ.ப.நோ.கூ.சங்கம், வவுனியா.**

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 05 . 1958



இறப்பு 31 . 07 . 2021

## பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம்

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப் பிடமாக வும் கொண்ட பொன்னம்பலம் பலசுப்பிரமணியம் கடந்த 31.07.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் நேசரத்தினம் ஆகி யோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், விதுஷிகா (ஆரணி - பல்கலைக்கழக மாணவி) அவர்களின் அன்புத் தந்தையும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (02.08.2021) திங்கட்கிழமை நடைபெற்று கோப்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 03 . 1931



மறைவு 03 . 08 . 2021

## திருமதி தங்கராஜா நாகரெத்தினம்

யாழ். நயினாதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 16/1, ஒட்டுமடம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி தங்கராஜா நாகரெத்தினம்** அவர்கள் 03-08-2021 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகநாதி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், நடராசா - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற தங்கராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், சிதம்பரநாதன், கிருஷ்னன், சுப்புலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை, கண்மணி, குணவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், குகணேஸ்வரி, காலஞ்சென்ற அன்பானந்தன், உதயேஸ்வரி (பிரான்ஸ்), சுரேந்திரன் (வவுனியா), தயாபரேஸ்வரி (பிரான்ஸ்), சத்தியசீலன் (நியூசிலாந்து), ஜெயதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வராசா, பற்குணதேவி, சண்முகநாதன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி (வவுனியா), குணபாலன் (பிரான்ஸ்), ஜீவாஞ்சனா (நியூசிலாந்து), இந்திரஜித் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரன், நந்தாயினி, சம்யுதா, சாம்பவி, சுவேநிதன், பவித்ரா, சயானா, தட்சாயினி, விஷ்ணு, துசிதா, இந்துஷா, யசிதா, திவ்யா, பரிசியா, திவாகர், லதுஷன், சுவீஸ்திகா, மிதுர்சிகா, சுவஸ்தி-கா, நேத்ரா, ரிஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கதுர்சன், டிலான், காலஞ் சென்ற சிவ அக்சயன், சிவசதுர்சன், சந்தோஷ், சுரபி, யதுநயனன், சுபஸ்திகா, அமிர்தவி, ஸ்கீர்த்தியா, நிலான், ரெயா, லிவா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04-08-2021) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**077 844 8080**
**077 494 4483**

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 01 . 1953



மறைவு 03 . 08 . 2021

## திருமதி அன்னபூரணம் பத்மநாதன்

உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி அன்னபூரணம் பத்மநாதன்** நேற்று (03.08.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா (பூபாலு ஐயா) - வாலாம்பிகை தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - கனகம்மா தம்பதியினரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதன் (ஆங்கில ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் அன்னலக்சுமி - கனகமகேந்திரா (அமரர்), அருளாம்பிகை (அமரர்) - கதிர்காமநாதன், வரதராஜன் - யாழினி, நவராசா - விஜயகுமாரி, அருணகிரிநாதன் (அமரர்), அருளானந்தராஜா (அமரர்) ஆகியோரின் சகோதரியும் சுதன், கரன்(அவுஸ்திரேலியா), சுஜிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அஜந்தன் (கனடா), சோபனா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆர்ஜன், ஆராதனா (கனடா), டியா (அவுஸ்திரேலியா), ஆருக்ஷனி, ஆதிஸ்வர் ஆகியோரின் பேர்த்தியும் ஹம்சானந்தி - உமாசுதன், நிதர்சனா, மயூரதன், நந்தினி, தாட்சாயினி (அமரர்), நிறோஜினி ஆகியோரின் பெரிய தாயும் அரங்கன், இமாயன், சதுர்விதன், சர்வஜனன் ஆகியோரின் மாமியும் யோகநாதன் (அமரர்), யோகமலர், சாந்திநாதன், கதிர்காமநாதன் (அமரர்), சிவநாதன் (அமரர்), சோதிநாதன், கமலநாதன் (அமரர்), சந்திரமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல் : குடும்பத்தினர்**

**கருணாகரப்பிள்ளையார் கோவிலடி,**
**உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய்.**

**சுதன் - 076 067 0230, 021 223 0817**
**கரன் - 0061 4212 57 150**
**சுஜி - 416 889 5883**

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 12 . 1937



மறைவு 02 . 08 . 2021

## திரு. சிமியோன் யேசுதாசன்

**( ஓய்வு பெற்ற மின்சார சபை உத்தியோகத்தர் )**

மன்னாரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிமியோன் யேசுதாசன் நேற்று முன்தினம் (02.08.2021) திங்கட் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிமியோன் - எலிசபேத் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அல்பிரட் முத்தையா - மாகிறேற் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் லில்லி மொணிக்கம்மாவின் அன்புக் கணவரும் மிலானி (பிரான்ஸ்), மரியனி சகீலா (கனடா), தயானி சபீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மக்ஸ்வெல் (பிரான்ஸ்), கிங்ஸ்சிலி (கனடா), மகிந்தன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற கிறிஸ்ரியன் மற்றும் அக்னெஸ், கொன்சி, றெஜினா, லூமினா, காலஞ் சென்றவர்களான சிசிலியா, அமலதாஸ், பிரான்சிஸ் ஜோசப், அலோசியஸ் மற்றும் கிறேஸ்மணி ஆகியோரின் மைத்துனரும் மணிலா காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் பிரசாத், வோள்டர், சுரேஸ்குமார் காலஞ்சென்ற சந்திரா மற்றும் அருளம்மா, சாமினி, ஆரோக்கியநாதன் ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் காலஞ் சென்றவர்களான றோசலின், யேசுதாசன் மற்றும் அருட்சகோதரி லூத்தம்மா (மட்டக்களப்பு), அன்ரன் ஞானப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனரும் டெஸ்மன், என்சிலி, காலஞ்சென்ற றீஜென்சி, றோசி, ஜெனீபா, காலஞ்சென்ற பிரதீப் ஆகியோரின் பாசமிகு மாமனும் றொணி, அதிரியன் (பிரான்ஸ்), றெனால்டோ, யுவானா, யுவானி (கனடா), மரினோ, லயனிக்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (03.08.2021) செவ்வாய்க்கிழமை கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல. 80, பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**021 221 2732**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1949



மறைவு 03 . 08 . 2021

## திரு. கந்தையா சுந்தரலிங்கம்

வேலணையை பிறப்பிடமாகவும்,புளியங்கூடல் மற்றும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு. கந்தையா சுந்தரலிங்கம்** அவர்கள் நேற்று (03.08.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மீனாட்சி தம்பதிகளின் அன்புமகனும் தியாகராஜா நாகம்மா தம்புதியரின் அன்பு மருமகனும் மலரின் அன்புக்கணவரும், மளாயினி, மருதூரன், மயூரன், மகிந்தினி, சிந்துஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேந்திரன் (சுதா), மல்லிகா, சதீஸ்குமார், சசிகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சரஸ்வதி, சண்முகலிங்கம் காலஞ்சென்றவர்களான சிவராசா, ராசாத்தி மற்றும் பராசக்தி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற ராசேந்திரம் (பிள்ளையார்) மற்றும் சபாரத்தினம், திலகவதி, ராசகிளி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அனோஜன், திலக்ஷன், டனுஷன், திவியா, ருட்சிகா, தனுஷ், ஆகாஸ், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2021) புதன்கிழமை மு.ப 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**077 1815 708**
**077 788 0821**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாட்டில்...

நாற்பதாவது அதிகாரமான பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆம் பிரிவு மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் போது ஜனாதிபதியால் வழங்கப்பட்ட அறிவிப்புகளை சமர்ப்பித்தபோதே சபாநாயகர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

நாட்டில் அண்மைக்காலமாக அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. கொத்தலாவல பல்கலைக்கழக உருவாக்கத்துக்கு எதிராக பிக்குகளும், கல்வியியலாளர்களும் ஒன்றிணைந்து போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரியும் கல்வியைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிராகவும் போராடி வருகின்றனர். விவசாயிகள் உரம் கோரி போராடி வருகின்றனர். அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்துக்கு எதிராக எதிர்க்கட்சியினர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறு எங்கும் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நிலைகொண்டுள்ள நிலையில் ஜனாதிபதியால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கோத்தாபயவின் ஆட்சியில் சர்வமும் இராணுவம் மயம் என்ற சித்தாந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்று பொதுவான குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே. இந்த நிலையில், அமைதியின்மையை போக்கி அமைதியை நிலைநாட்டுமாறு இராணுவத்தினருக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளமைக்கு அரசியல்வாதிகள் பலரும் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். (ம)

### யாழ்ப்பாணத்தில்...

கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த தெல்லிப்பழையைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். இதையடுத்து யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 132ஆக அதிகரித்துள்ளது. (ம-26)

### வடக்கு...

மாவட்டத்தில் 69.49 வீதமானவர்கள் தடுப்பூசியின் ஒரு டோஸையேனும் பெற்றுள்ளனர். இதுவே வடக்கு மாவட்டங்களில் உள்ள அதிகபட்ச அடைவாக உள்ளது. கிளிநொச்சியில் 64.49 வீதமானவர்களே தடுப்பூசியின் ஒரு டோஸையேனும் பெற்றுள்ளனர். இதுவே குறைந்தபட்ச அடைவாக உள்ளது. இதைவிட யாழ்ப்பாணத்தில் 66.71 வீதமானவர்களும், முல்லைத்தீவில் 67.33 வீதமானவர்களும், மன்னாரில் 67.54 வீதமானவர்களும் தடுப்பூசியின் ஒரு டோஸையேனும் பெற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பூசிப் பெறுகையின் சராசரி 67.4 வீதமாக உள்ளது. (ம-26)

### நல்லூர்...

ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நல்லூர்க் கந்தன் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் நேற்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

நல்லைக் கந்தப் பெருமானின் வருடாந்தப் பெருந்திருவிழாவானது இம்மாதம் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வேளையில் நாடெங்கும் ஏற்பட்டுள்ள கொடிய கொரோனா தொற்றின் தீவிர பரவல் நிலையைக் கருத்தில் கொண்டு தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதார சட்ட நடைமுறைகள், விதிகள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களை முழுமையாகவும், இறுக்கமாகவும் பின்பற்றி அமைதியாக ஆடம்பரமின்றி பக்தி பூர்வமாக இப்பெருந்திருவிழா நடைபெற பொதுமக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இக்காலச் சூழலுக்கு ஏற்ப அவ்வப்போது விடுக்கப்படும் சுகாதார அறிவுறுத்தல்களை சிரமங்கள் பாராது, பொறுப்புணர்வுடன் கடைப்பிடித்து எதிர்வரும் நாள்களில் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தவிர்க்க பெருமனத்துடன் உதவ வேண்டும் என்றுள்ளது. (ம-26)

### மஹிந்தானந்தவுக்கு...

பட்ட அன்டிஜன் சோதனையிலேயே அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவருக்கு இன்று பி.சி.ஆர் சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சர் உதய கம்மன்பில தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். அவரின் அமைச்சிலுள்ள அதிகாரிகளுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே அவர் தனிமைப்படுத்திக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### யாழ்ப்பாணம்...

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சண்முகநாதன் சிறிபவானந்தராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் போதனா மருத்துவமனையில் நாளொன்றுக்கு 120 வரையான ஒக்சிசன் சிலிண்டர்கள் இதுவரை பாவிக்கப்பட்டு வந்தன. எனினும் தற்போது கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக குறித்த சிலிண்டர் பாவனையின் சராசரி 180க்கு மேல் அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு நாளும் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் இருந்து மூன்று தடவைக்கு மேல் வாகனங்கள் அனுராதபுரம் சென்று சிலிண்டர்கள் பெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் குடாநாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளதன் காரணமாக வைத்தியசாலை விடுதிகளில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்திலும் கொரோனா தொற்றாளர்கள் அதிகளவில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். எனவே தற்போதுள்ள நிலையில் மருத்துவ வளங்களில் பெரும்பாலானவை கொரோனா தொற்றுக்குள்ளானோருக்குப் பாவிக்கப்படுகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் தடுப்பூசி போடாதவர்கள்தான் அதிகமாக இறப்பைச் சந்திக்கின்றார்கள். எனவே பொதுமக்கள் அனைவரும் தடுப்பூசியைப் போடுவதன் மூலம் உயிரிழப்புகளில் இருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். அத்தோடு இனிமேல் மருத்துவமனைக்கு வருவோர் தமக்குரிய தடுப்பூசி அட்டையைக் கொண்டுவருதல் மிக அவசியமான ஒன்றாகும். எனவே நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து பொதுமக்கள் அனைவரும் செயற்பட வேண்டும் என்றார். (ம-26)

### அரந்தலாவ...

போது முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சட்டமா அதிபரால் உயர்நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பால் நடத்தப்பட்டது எனக் கூறப்படும் குறித்த தாக்குதலின்போது படுகாயமடைந்த நிலையில் உயிர் தப்பிய ரிதிமாலியத்த புத்தசார தேரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாகிய அரச சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி அவந்தி பெரேரா, இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும், சம்பவம் தொடர்பில் ரிதிமாலியத்த புத்தசார தேரரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை அடுத்துவரும் வழக்கு விசாரணை களின் போது நீதிமன்றத்தில் சமர்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1987 ஜூலை 2ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டது எனக் கூறப்படும் அந்தத் தாக்குதலில் 31 பிக்குகளும், சிவிலியன்கள் மூவரும் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்பதுடன், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டை வழங்க வேண்டும் என்றும் கோரி, அந்தச் சம்பவத்தில் உயிர் தப்பிய ரிதிமாலியத்த புத்தசார தேரர், 34 வருடங்களின் பின்னர் 2020ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர், தேசிய புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அரந்தலாவ படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களிடம் வாக்குமூலங்களைப் பெறுமாறு 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருந்தார். இதற்கமைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், சட்டமா அதிபர் தரப்பினரால் விசாரணைகள் நடத்தப்படுவது தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மனு மீதான விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-22)

### வீட்டுத்திட்ட....

தர் இடமாற்றப்பட்டுள்ளார். அவரது இடமாற்றம் தாபன விதிக்கோவைக்கு முரணான வகையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 10 லட்சம் மற்றும் 6 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு வகையான வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த வீட்டுத் திட்டங்களுக்குரிய பயனாளிகள் தெரிவில் அரசியல் தலையீடுகள் காரணமாக தகுதியான பயனாளிகள் நீக்கப்பட்டு அரசியல் கட்சியின் ஆதரவாளர்கள் இணைக்கப்பட்டதாக பிரதமர் அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. பிரதமரின் இணைப்பாளர் இது தொடர்பில் தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்களை அழைத்து கலந்துரையாடல் நடத்தியிருந்தார். இதன்போது ஒரு சில அபிவிருத்தி அலுவலர்கள் முறைகேடுகளை பிரதமரின் அலுவலக இணைப்பாளருக்கு கூட்டத்தில் பகிரங்கமாகத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறு பிரதமரின் இணைப்பாளருக்கு உண்மையை எடுத்துரைத்த அபிவிருத்தி அலுவலர் ஒருவர் திடீரென இடமாற்றப்பட்டுள்ளார். அவர் மீது காலம் கடந்த குற்றச்சாட்டுக்கள் சில சுமத்தப்பட்டிருந்தன. அதற்கு அபிவிருத்தி அலுவலர் உரிய பதில் வழங்கியிருந்தார். இருப்பினும், முதனிலை ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் அவரை இடமாற்றுவதாகத் தெரிவித்து மாவட்டச் செயலர் கடிதம் அனுப்பியுள்ளார். ஆனால் தாபன விதிக் கோவைக்கு அமைவாக இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஒழுக்காற்று விசாரணை, சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரோ அல்லது சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளோ தவிர்ந்த குறித்தொதுக்கப்பட்ட அலுவலர் ஒருவராலேயே முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற போதும் இங்கு அவ்வாறு எதுவும் முன்னெடுக்கப்படா மலேயே இடமாற்றம் அவசர அவசரமாக வழங்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக திட்டமிட்ட ரீதியில் பழிவாங்குவதற்காகவே மேற்படி இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது அம்பலமாகுவதாக ஓய்வுபெற்ற அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், இவ்வாறான இடமாற்றங்களை மேற்கொள்வதன் ஊடாக, மோசடிகளை அம்பலப்படுத்தும் அதிகாரிகளை அரசியல் அழுத்தங்களுடன் அச்சுறுத்த முனைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (7)

### பெண் எம்.பிக்களுக்கு...

இருக்கின்றோம். எனினும், வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின் போது, வாய்மொழிமூலமாக பெண் எம்.பிக்கள், பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

பெண்கள், உறுப்பினர்களின் மனைவி மற்றும் முறையற்ற உறவுகள் தொடர்பில் இவ்விடத்தில் பேசவேண்டிய அவசியமில்லை. அது மக்களின் பிரச்சினையும் இல்லை. ஆனால், அவ்வாறு பேசப்பட்டபோது, அதனையெல்லாம் நீங்கள் (சபாநாயகர்) கேட்டுக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தீர்கள். இதற்கு எனது கண்டனங்கள். எமது அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரலவே இவ்வாறு வாய்மொழி மூலமான பாலியல் துன்புறுத்தலுக்கு அன்றையதினம் உட்படுத்தப்பட்டார் என்றார். இதற்கு பதிலளித்த சபாநாயகர், இதுதொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன் -என்றார். (ம)

### கொத்தாலாவல...

நாடாளுமன்ற நுழைவு வீதிக்குள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் ஆர்ப்பாட்டப் பேரணி நுழைய முற்பட்டபோது பதற்றநிலை ஏற்பட்டது.

இதன்போது, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தப் பதற்றநிலை நீண்டநேரம் நிலவியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத்தை விஞ்சிய நட்பு

டோக்கியோ, ஓக. 4

**ஒலிம்பிக்கில் நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சுவாரஸ்யமான சம்பவம் நடந்துள்ளது. உயரம் தாண்டுதலில் கட்டார், இத்தாலி வீரர்கள் இருவரும் தங்கத்தைப் பகிர்ந்துகொண்டு தங்களின் நட்பு தங்கத்தை விட உயர்ந்தது என நிரூபித்துள்ளனர்.**

கட்டார் நாட்டின் முதாஸ் பார்ஷிம், இத்தாலியின் கியான்மார்கோ தம்பேரி ஆகியோர்தான் தங்கப் பதக்கத்தைப் பகிர்ந்துகொண்டனர். களத்தில் இரு வீரர்களும் எதிரெதிர் நாட்டைச் சேர்ந்த போட்டியாளர்களாக இருந்தாலும், தனிப்பட்ட முறையில் இருவரும் சிறந்த நண்பர்கள். இரு வீரர்களுக்கும் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது ஒலிம்பிக்கில் அரிதான நிகழ்வாகும்.

டோக்கியோவில் நடந்துவரும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் உயரம் தாண்டுதல் போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் கட்டார் நாட்டு வீரர் முதாஸ் பார்ஷிம், இத்தாலியின் கியான்மார்கோ தம்பேரி, பெலாரஸ் வீரர் மாக்சிம் நெடாசேகு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இதில் முதாஸ் பார்ஷிம், கியான்மார்கோ இருவரும் 2.37 மீற்றர் உயரத்தைத் தாண்டி ஒரே புள்ளிகளைப் பெற்றனர். 2.39 மீட்டர் உயரத்தைத் தாண்டுவதற்கு இருவரும் 3 முயற்சிகள் செய்தும் அதில் இருவரும் 3 தவறுகளைச் செய்தனர். இதையடுத்து, இறுதியான வெற்றியாளரைக் கண்டுபிடிக்க கடைசியாக தாண்டுதலை நடத்த நடுவர் முடிவு செய்தார்.

அப்போது, ஒலிம்பிக் போட்டி நடுவரிடம் பார்ஷிம், 'இருவருக்கும் தங்கப்தக்கம் கிடைக்க வாய்ப்பிருக்கிறதா, இருவரும் தங்கத்தை ஷேர் செய்ய முடியுமா' எனக் கேட்டார். இதற்கு நடுவரும் தங்கத்தைப் பகிர்ந்து அளிக்க சம்மதம் தெரிவித்தார். இதைக் கேட்டவுடன் பார்ஷிம், கியான்மார்கோவும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலமும், ரியோவில் வெள்ளியும் வென்றவர் பார்ஷிம். ஆனால், கடந்த 2018ஆம் ஆண்டில் காலில் ஏற்பட்ட காயத்தால் பெரும்பாலும் போட்டிகளில் பங்கேற்க முடியவில்லை. அந்த நேரத்தில் பார்ஷிம் காயத்திலிருந்து குணமடைந்து மீண்டும் விளையாடவருவதற்கு கியான்மார்கோ பெரும் ஆதரவு அளித்துள்ளார். தங்கப்பதக்கம் குறித்து பார்ஷிம் கூறுகையில், 'இது எனக்குக் கனவு போன்றது. இதிலிருந்து கண்விழிக்க நான் விரும்பவில்லை. இந்த நாளுக்காகத்தான் 5 ஆண்டுகள் காத்திருந்தேன். பல காயங்கள் பின்னடைவுகள். இன்று இருவரும் இந்த தருணத்தைப் பகிர்ந்துகொண்டோம். இது உண்மையில் மதிப்பு மிகுந்தது' எனத் தெரிவித்தார் (ம)

# உலக சாதனையை படைப்பாரா கோலி?

**லண்டன், ஓக. 4**

**இந்திய அணியின் தலைவரான கோலி, ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரும் ஜாம்பவானுமான பொன்டிங்கின் சாதனையைத் தகர்ப்பாரா என்பது தொடரில் பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.**



அணித் தலைவராக பொன்டிங் இதுவரை 41 சதங்களைக் கண்டுள்ளார். கோலியும் 41 சதங்களைக் குவித்து பொண்டிங்கைச் சமன்செய்துள்ளார். இந்த நிலையில் இன்னும் ஒரு சதத்தைப் பெற்றால் கோலி பொண்டிங்கை முறியடித்து உலக சாதனை படைப்பார். இந்தச் சாதனை இன்று ஆரம்பமாகும் இங்கிலாந்து இந்தியா இடையிலான தொடரில் படைக்கப்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று கருதப்படுகின்றது. (ம)



# முதலாவது டெஸ்ட் அகர்வால் இல்லை!

லண்டன், ஓக. 4

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான மயங் அகர்வால், பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டதால் இன்று ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வலைப்பயிற்சியின் போது சிராஜ் வீசிய பந்து அகர்வாலின் தலையைத் தாக்கியது.

இதையடுத்தே அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. ஐ.சி.சி விதியின்படி, ஒரு வீரருக்கு ஹெல்மெட்டில் பந்துபட்டால் அவருக்கு கன்கஸன் பரிசோதனை நடத்தப்பட வேண்டும். அதன் அடிப்படையில் அகர்வாலுக்கு பரிசோதனை நடத்தப்படவுள்ளது. (ம)

ஐ.பி.எல் இரண்டாவது பாதியில்

# இங்கிலாந்து வீரர்கள் விளையாட அனுமதி

லண்டன், ஓக. 4



ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது பாதியில் நேர அட்டவணைச் சிக்கல்களால் இங்கிலாந்து வீரர்கள் விளையாடுவதில் சந்தேகம் நிலவிய நிலையில், அவர்கள் அனைவரும் விளையாடுவார்கள் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது.

இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான தொடர் இந்த வருடம் நடைபெறவிருந்ததால் இங்கிலாந்து வீரர்கள் அட்டவணை இறுக்கநிலை காரணமாக ஐ.பி.எல். தொடரில் விளையாட முடியாத சூழ்நிலை இருந்தது. இந்த நிலையில் இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான தொடர் 2023ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து ஐ.பி.எல். தொடரில் இங்கிலாந்து வீரர்கள் விளையாடுவது உறுதியாகியுள்ளது. (ம)

**பணியாளர் தேவை**

வீட்டுத்தோட்டத்துடன் கூடிய வீட்டைப் பராமரிப்பதற்கு பணியாளர் ஆண் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. தங்கி நின்று பணிபுரிவதற்கு. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

**தொடர்பு : 077 030 6716**

**வேலைக்கு ஆள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல ரெஸ்ரோன்டிற்கு சுத்திகரிப்பாளர் (Room Boy) தேவை. உணவு, தங்குமிடம் இலவசம் சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

**077 515 9448**





**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமன் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 1 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்திலிருந்து 400m தூரம் (பார்வையிடும் நேரம் - காலை 8.00 - மாலை 6.00 மணி வரை) தரகர் தேவையில்லை.

**1 ½ பரப்பின் விலை 10 00000 (பத்து லட்சம்)**

**077 814 7389 / 077 614 7333**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.